Registered as a Newspaper

யமஹாஏஜென்சி
உங்களுக்குத் தேவையான சகலவிதமான யமஹா உதிரிப்பாகங்களைப் பெற்றுக்கொள்ளவும், இயந்திரங்களைப் பழுது பார்ப்பதற்கும், கிறுங், பிற்றிங் செய்து கொள்வதற்கும் நாடவேண்டிய ஸ்தாபனம்.
ஜோசப் மோட்டர் வேக்ஸ்
பிரதான வீதி,
பருத்தித்துறை.

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ. 1-50

YAMAHA AGENCY
யமஹா அவுட்போட் மோட்டர் மீண்டும் 10-8-87 முதல் பருத்தித்துறை பிரதான வீதியில் இயங்கத்தொடங்கியுள்ளது.
ஜோசப் மோட்டர் வேக்ஸ்
யமஹா ஏஜென்சி
பிரதான வீதி,
பருத்தித்துறை.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஸூ ஆவணி மீ 09 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1409 ஜுல்ஹஜ் பிறை 28 (25 – 08 – 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 232

★ மலையகத் தமிழருக்குத் தாமதமின்றிக் குடி உரிமை
★ சிங்களக் குடியேற்றத்தை உடன் நிறுத்த வேண்டும்
★ அரசியல் கைதிகளை உடன் விடுவிக்க வேண்டும்
★ அவசரகால, பயங்கரவாதத் தடைச் சட்டங்களை நீக்குக

# ஒப்பந்தத்தின் வழி நின்று நான்கு அம்சப் போராட்டம்

## ஈழவர் முன்னணி முடிவு

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 25

நான்கு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து போராட்டம் ஒன்று பரந்த அளவில் நடக்க இருக்கிறது. ஈழவர் முன்னணி இதற்குரிய முடிவை மேற்கொண்டிருக்கிறது. இலங்கை – இந்திய ஒப்பந்தத்துக்கு உட்பட்டு, அதன் வழிநின்று போராட்டம் நடத்தப்படும்.

✶ மலையகத் தமிழர்களுக்குத் தாமதம் இன்றிப் பிரசாஉரிமை வழங்கவேண்டும்.

✶ தமிழர் பிரதேசங்களில் இடம்பெற்று வரும் சிங்களக் குடியேற்றங்களை உடன் நிறுத்தவேண்டும்.

✶ அரசியல் கைதிகள் சகலரையும் தமிழர், சிங்களவர் என்ற பேதமின்றி உடன் விடுதலை செய்யவேண்டும்.

✶ அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் ஆகியவற்றை உடன் நீக்கவேண்டும்.

மேற்கண்ட நான்கு முக்கிய கோரிக்கைகளையும் முன்வைத்தே ஈழவர் முன்னணி பரந்த அளவில் போராட்டம் நடத்த முடிவு செய்திருக்கிறது.

போராட்டம் தொடர்பாக ஈழவர் முன்னணியின் செயலாளர் திரு. எட்வேட் விடுத்த அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

இந்திய—இலங்கை உடன்பாட்டில் எட்டப்பட்ட அம்சங்கள்கூட சரிவர நிறைவேற்றப்படாமல் இழுத்தடிப்புச் செய்யப்படும்அதேவேளை உடன்பாட்டு மீறல்கள் ஏற்பட்டு வருவதும் கண்கூடானதாகி வருகிறது.

எனவே, இலங்கை—இந்திய உடன்பாட்டின் வழிநின்று ஈழவர் முன்னணிமேற்கண்ட கோரிக்கைகளை முன்வைத்துப் போராட முன்வந்துள்ளது.

சிறிலங்கா அரசினால் கொண்டுவரப்பட்ட அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பன உடன் நீக்கப்படல் வேண்டும்.

வேட்டுச் சத்தங்களும், பதற்றமான சூழ்நிலையும் அற்றுப்போயுள்ளதால் அரசியல் அமைதியும், சமாதானமும் ஏற்பட்டு விட்டதென்ற மாயையில் சிக்கி மூழ்கிப்போவோமேயானால் எதிர்காலம் சூனியமாகி விடும்.

(6ஆம் பக்கம் பார்க்க)




உவர் கொந்தராத்துக்காரர் எப்படி எப்படியெல்லாம் சீறினர். கடைசியாப் பாத்தா எல்லாம் வெறும் புஸ்வாணமாப் போல் எல்லோ கிடக்குது.........!

## ஜனவரி முதல் இராமேஸ்வரம் கப்பல் சேவை

புதுடில்லி, ஆக. 25

இராமேஸ்வரம் – தலைமன்னார் கப்பல் போக்குவரத்து அடுத்த ஆண்டு ஜனவரி முதல் ஆரம்பமாகும்.

ஆயிரம் பயணிகளை ஏற்றிச்செல்லக் கூடிய கப்பல் ஒன்றை இதற்காக இந்தியக் கப்பல் போக்குவரத்துக் கூட்டுத்தாபனம் வாங்கவுள்ளது.

இலங்கை அமைச்சர் மூகமது புதுடில்லியில் இந்திய அமைச்சர் ராஜேஸ்வர் பைலட்டுடன் நடத்திய பேச்சுக்களின் போது இந்த முடிவு எடுக்கப்பட்டது.

ராமேஸ்வரத்தில் இருந்து தலைமன்னாரை 4 மணி நேரத்தில் இக்கப்பல் சென்றடையும்.

இலங்கை – இந்தியக் கப்பல் போக்குவரத்தை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்று அமைச்சர் மூகமது வேண்டுகோள் ஒன்றை இந்திய அரசுக்கு விடுத்து இருந்தது தெரிந்ததே. (உ-எ)

அவருக்கு மனம் மாறுகிறது

## ஒப்பந்தம் குறித்து பிரதமர் திருப்தி

### தனித்துவமானது என்று பாராட்டும் தெரிவிப்பு

கொழும்பு ஆக, 25

இந்திய–இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது குறித்து பிரதமர் பிரேமதாஸ பூரண திருப்தி தெரிவித்திருக்கின்றார்.

'ஆரம்பத்தில் ஒப்பந்தத்தின் சில விதிகள் குறித்து எதிர்ப்புத் தெரிவித்தேன்; குறிப்பாக கிழக்கு மாகாணத்தின் நிலை பற்றி. இப்போது அப்பிரச்சினை திருப்திகரமாகத் தீர்க்கப்பட்டுள்ளது. இது எனக்கு மகிழ்ச்சி தருகின்றது'–

– இப்படி பிரதமர் பிரேமதாஸ சொன்னர்,

'காலிஜ் டைம்ஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் பிரதமர் இத்தகவல்களைத் தெரிவித்தார்.



பிரேமா

பிரதமர் பேட்டியில் மேலும் சொன்னதாவது;

எந்தப் பிரச்சினையையும் பேச்சுக்கள், கலந்துரையாடல்கள் மூலம் அரசமைப்பு ரீதியில் தீர்த்துக்கொள்ள முடியும்.

வன்செயல்கள் ஒரு போதும் உதவாது.

(6ம் பக்கம் பார்க்க)

## இலங்கை—இந்தியா நேரடித் தொலைபேசி சேவை ஆரம்பமானது

புதுடில்லி, ஆக 25

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையேயான நேரடித் தொலைபேசித் தொடர்பு நேற்று பிரதமர் ராஜீவ் காந்தியினால் அங்குரார்ப்பணஞ் செய்து வைக்கப்பட்டது.

செய்மதி மூலம் இத்தொலைத் தொடர்பு வழங்கப்பட்டுள்ளது.

முதலாவது அழைப்பைப் பிரதமர் ராஜீவ்

(6ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை கிளையில் பணக் கொடுப்பனவுக்கு விசேட கருமபீடம்

யாழ்ப்பாணம், ஆக. 25

இலங்கை வங்கி, தனது நெல்லியடிக்கிளை வாடிக்கையாளர்களின் பணத் தேவைகளைப் பூர்த்தி செய்யுமுகமாக தனது பருத்தித்துறைக்கிளையில் விசேட கருமபீடம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

காசோலை மாற்றுதல் சேமிப்புக் கணக்கில் இருந்து பணம் திரும்பப் பெறுதல் ஆகிய சேவைகளை நெல்லியடிக்கிளையு

(6 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

25-8-1987

செவ்வாய்க்கிழமை

சுபநேரம்:-
10.35 முதல் 12.05வரை
ராகுகாலம்:-
3 05 முதல்– 4.35வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

★ யாழ் குடாநாட்டில்

## இரண்டரைக் கோடி ரூபா செலவில் ஆயிரம் வீடுகள்

### நோர்வே அதிகாரிகள் வருகை

யாழ்ப்பாணம், ஆக. 25

யாழ் குடாநாட்டில் ஸ்ரீலங்கா இராணுவத் தாக்குதல்களினால் வீடுகளை இழந்தவர்களுக்கு ஆயிரம் வீடுகளை சுமார் இரண்டரைக்கோடிரூபா செலவில் கட்டிக்கொடுப்பதற்கு நோர்வே செஞ்சிலுவைச்சங்கம் முன்வந்துள்ளது. 25 ஆயிரம் ரூபாசெலவில் ஒவ்வொரு வீடும் அமைக்கப்படும்.

வீடுகள் சட்டுவதற்கான இடங்களைப் பார்வையிடுவதற்கெ ன நோர்வே செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி ஒருவர் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

இன்று பாதிக்கப்பட்ட இடங்களை அவர் இந்திய இலங்கை செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகளுடன் சென்று பார்வையிடுவார் (உ–10

## ஒருகையில் சிலுவை; மறுகையில் கட்டில் சட்டம்!

குருநகர், ஆக. 25

'கொழும்பு குண்டு வெடிப்பைத் தொடர்ந்து நாம் இருந்த மகஸின் சிறைச்சாலையில் இரண்டாயிரம் குற்றவியல் கைதிகள் புதிய அலவாங்கு, பிக்கான், மண்வெட்டிசகிதம் நாமிருந்த சிறையின் சுவரைத் துவாரமிட்டார்கள்.

அச்சமயம் 210 தமிழ்க் கைதிகள் அங்கிருந்தோம்.

எனது ஒருகையில் சிலுவை, மறு கையில் கட்டில் சட்டம், மூக்கியமாக அந்தச் சிறையில் என்கூட இருந்த மற்றைய இளைஞர்களைக் காப்பாற்றுவதற்காகத் துணிந்து போராடினேன்.

பீதியடைந்த ஒரு சிலர் குளியலறை, மலகூடம் வேறு மறைவிடங்களில் ஒளித்துக் கொண்டனர். தமது உயிரைக் காப்பாற்றத் துணிந்து நின்ற இளைஞர்கள் என்னுடன் நின்றனர்.

—இவ்வாறு கூறினர்

## சிறைப் போராட்டம் குறித்து சிங்கராயர்

வணபிதா சிங்கராயர்:

நேற்று முன்தினம் மாலை குருநகர் புனித ஆரோக்கியநாதர் ஆலய வருடாந்த உற்சவத்தின் ஆரம்பதின வைபவத்தில் கலந்து திருப்பலியை நிறைவேற்றி மறைஉரையாற்றுகையில் வணபிதா சிங்கராயர் அடிகள்

(6ஆம் பக்கம் பார்க்க)

## விபத்தில் சிக்கி இளம் கர்ப்பிணி பலி!

யாழ்ப்பாணம், ஆக. 25

ஆஸ்பத்திரிக்குச்சென்ற தம்பதிகளை மினிவான் மோதியதில் 9 மாதக் கர்ப்பிணியான மனைவி மரணமானர்.

கணவன், பலத்த காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை 9 மணி அளவில் ஆஸ்பத்திரி வீதியில் யாழ். ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பகுதிக்கு முன்பாக இச்சம்பவம் நடைபெற்றது.

சென் மைக்கல் ஜெயமாலா (வயது 23) என்ற பெண்ணே இவ்விபத்தில் பலியானவராவர்.

9 மாதக் கார்ப்பிணியான இவர் கிளினிக்

(6ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் மீண்டும் போலியோ நோய்!

யாழ்ப்பாணம், ஆக. 25

யாழ். குடாநாட்டில் மீண்டும் போலியோ வியாதி அதிகரித்து வருகின்றது.

குருநகர்ப் பகுதியில் சுமார் 30 குழந்தைகளும் காங்கேசன்துறை, பருத்தித்துறை பகுதிகளில் பல குழந்தைகளும் இந்நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

அண்மையில் போலியோ நோயினால் பீடிக்கப்பட்ட மூன்று குழந்தைகள். யாழ் ஆஸ்பத்திரியில் மரணமானதும் குறிப்பிடத்தக்கது.

ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளே அதிகளவு இந்நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர். (உ–10)

பழநி செல்லும் அதிர்ஷ்டசாலி யார்?

விரையுங்கள்!

அதிர்ஷ்டப் பயணப்போட்டி முடிவு தினம் இன்று

நிரப்பியகூப்பன்களைஉடனடியாகவே கீழ்க்கண்ட இடங்களில் ஒன்றில் சேர்ப்பியுங்கள்.

1. லியோ சாவடி - நல்லூர்
2. நல்லை ஆதீனம்
3. வேல் முருகன் ஸ்ரோர்ஸ் நல்லூர்

(கூப்பன் மூன்றும் பக்கத்தில்)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

### உதய சங்கற்பம்

ஞானசாதனம் என்பது ஆண்டவனுடைய தாமரைப் பாதங்களில் மனத்தினை நிறுத்தி அவன் நினைவிலேயே மூழ்கிக் கிடப்பதாகும்.

— அன்னை சாரதாதேவி

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி 24805 22079

25.8.1987 த.பெ.இல: - 83

## எது தலையாயது?

ஜே. ஆர்-ராஜீவ் ஒப்பந்தத்தின் பிரகாரம் வடக்கு—கிழக்கு மாகாணங்களை நிரந்தரமாக இணைப்பது குறித்து 1988 ஆம் ஆண்டு முடிவதற்குள் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.

வடக்கோடு சேர்ந்து இயங்குவதற்குக் கிழக்கு மக்கள் விரும்புகிறார்களா என்பதை அறிவதற்காகத் தான் இந்த சர்வஜன வாக்கெடுப்பு என்பதே ஸ்ரீலங்கா அரசாங்கம் முன் வைக்கும் காரணம். அதுவே சரியான ஜனநாயக வழி என்றும் அரசு வாதம் புரிந்து நிற்கிறது.

வடக்கும் கிழக்கும் தமிழர்களின் பாரம்பரிய தாயகம் என்ற கோட்பாட்டை ஒப்பந்தம் சரிவர — பூரணமாக ஏற்றுக்கொள்ளவில்லை. ஒப்பந்த வாசகம் அதனை ஏற்காத விதத்தில் மிகப் பூடகமாக எழுதப்பட்டிருக்கிறது.

எனவே, வடக்கு கிழக்கு இணைப்பை நிரந்தரமற்றதாக்குவற்கு மேற்கொள்ளப்படும் ஒரு சூழ்ச்சியாகவே சர்வஜன வாக்கெடுப்பைத் தமிழர்கள் கருதவேண்டியுள்ளது.

வடக்கு— கிழக்கு இணைப்பை முஸ்லிம் மக்களில் பெரும்பாலானவர்கள் ஆதரிக்கிறார்கள்.

எனினும் சர்வஜன வாக்கெடுப்பு அவசியம் தானா இல்லையா என்பதில் முஸ்லிம் மக்கள் தரப்பில் இருந்து இன்னும் தெளிந்த கருத்து எதுவும் வரவில்லை.

ஆனால் முஸ்லிம் அரசியல் பிரமுகர்களின் குழு ஒன்று சர்வஜன வாக்கெடுப்பை அடுத்த வருடத்தில் நடத்தாமல் மூன்று வருடங்களின் பின்னர் நடத்த வேண்டும் என்ற கருத்தை முன் வைத்திருக்கின்றது. ஒரு வருடத்தில் வடக்கு— கிழக்கு இணைப்பினால் உண்டாகும் நடைமுறை நன்மை தீமைகளை அறிந்து கொள்வது கஷ்டம். ஆகையால் ஒரு வருடகால அவகாசம் போதாது என்பது அந்தக் குழுவின் வாதம்.

இந்தக் கோரிக்கை உடனடியாக இணைப்பை மூன்று வருடங்களுக்கு நிரந்தரமாக்கும் என்பது தான் ஒரேயொரு நன்மையே அன்றி வேறு எதுவும் அல்ல.

இந்தளவு நீண்ட காலம் தமிழர்களையும் முஸ்லிம்களையும் பல சிக்கல்களுக்குள் வீழ்த்தி, அவர்களிடையே கருத்து வேற்றுமையை உண்டாக்கி அவர்களைப் பிரித்து வைக்க அரசுக்குச் சந்தர்ப்பத்தை அளிப்பதாக முடியும் என்பதை மறந்து விடலாகாது

ஆனால்—

1983 ஆம் ஆண்டு தொடக்கம் தமது சொந்த இடங்களை விட்டுச் சென்றவர்கள், துரத்தப்பட்டவர்கள் என்ற இருவகையினரும் தமக்கு உரிமையுள்ள இடங்களுக்கு அச்சமின்றித் திரும்பச் சென்று நிம்மதியாக வாழ்க்கை நடத்தத் தொடங்கிய பின்னரே சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். அதற்கு முந்தி சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதில் அர்த்தமிருக்காது. உண்மையாக கிழக்கு மக்களின் கருத்தை அறிந்ததாக முடியாது.

அதைவிட முக்கியமான அம்சம் இன்னொன்று உண்டு. 1948 ஆம் ஆண்டுக்குப் பின்னர், மிகக் குறிப்பாக வடக்கும், கிழக்கும் சேர்ந்த பிரதேச சபை உண்டாக வேண்டும் என்ற கோரிக்கை முன் வைக்கப்பட்ட 1957 ஆம் ஆண்டின் பின்னர், கிழக்கில் தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களில் கட்டுப்பாடில்லாத அளவில் சிங்களக் குடியேற்றம் நடந்திருக்கிறது. அப்படிக் குடியேற்றப்பட்டவர்களை அந்தப் பகுதியின் சொந்த மக்களாகக் கருதமுடியாது. அவர்கள் உண்மையில் ''வந்தேறு குடிகள்''

கிழக்கு வடக்கோடு இணைய வேண்டுமா என்று முடிவு சொல்லும் அருகதை அவர்களுக்கு இருக்க முடியாது. ஆகையால், 1957 ஆம் ஆண்டுக்கு முந்திய தேர்தல் இடாப்பை அடிப்படையாக வைத்து சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுவதே நியாயம்.

சுமார் 150 வருடங்களுக்கு முன்னரே இங்கு வந்து, இந்த நாட்டின் பொருளாதாரத்துக்கு அடித்தளமாக விளங்கி, உழைத்துக் கொள்ளும் மலையகத் தமிழர்களுக்கு இன்னமும் முற்று முழுதாகப் பிரசா உரிமை வழங்கப்படவில்லை.

அவ்வாறுயின் முப்பது வருடங்களுக்கு முன்னர் கிழக்கில் குடியேற்றப்பட்ட சிங்களவருக்கு, வடக்கு கிழக்கு இணைப்புச் சம்பந்தமான சர்வஜன வாக்கெடுப்பில் பங்கு கொள்ள எப்படி உரிமை வழங்க முடியும்?

சிங்களவருக்கு ஒரு நீதி, தமிழருக்கு வேறு நீதி என்ற சிங்களப் பேரினவாத ராகம் மீண்டும் இதில் ஒலிக்கிறதல்லவா?

எனவே சர்வஜன வாக்கெடுப்பு நடப்பதானால் அது எப்போது நடக்கும் என்பதை விட, எந்த வாக்காளர் இடாப்பு அடிப்படையில் நடக்க வேண்டும் என்பதே தலையாயதாகும்.

# ஐ.நா. வரும் சோவியத் தலைவருடன் றேகன் பேச்சு நடத்த மாட்டார்

வாஷிங்டன், ஆக 24

அடுத்த மாதம் அமெரிக்கா வரும் சோவியத் தலைவர் மிக்கெய்ல் கோர்பச்சேவுடன் அமெரிக்க அதிபர் றேகன் பேச்சுக்கள் நடத்தமாட்டார்.

இப்படி அமெரிக்க வெளியுறவு அமைச்சு அறிவித்திருக்கின்றது.

அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் ஐ நா. பொதுச்சபைக் கூட்டத்தில் பேசுவதற்கு சோவியத் தலைவர் கோர்பச்சேவ் அமெரிக்கா செல்வார் என்றும் அப்போது அதிபர் றேகனுடன் உச்சி மாநாடு நடத்துவார் என்றும் 'லாஸ் ஏஞ்சல்ஸ் டைம்ஸ் செய்தி வெளியிட்டது.'

அதைமறுத்தே அமெரிக்க வெளியுறவு அமைச்சு அறிக்கை வெளியிட்டுள்ளது.

ஆதாரமற்றது அச் செய்தி— இப்படி அறிக்கையில் மேலும் கூறப்பட்டது. (இ-எ)

## இன்னும் மூன்று வருடங்களில் இந்தியாவிடம் 225 அணுகுண்டுகள்

### அமெரிக்க சஞ்சிகை குற்றச்சாட்டு

வாஷிங்டன், ஆக. 24

1990 ஆம் ஆண்டில் இந்தியாவிடம் 225 அணு குண்டுகள் இருக்கும்.

அமெரிக்க சஞ்சிகை ஒன்று இத்தகவலை வெளியிட்டிருக்கின்றது.

அணுகுண்டு தயாரிப்பதற்கான சக்தியைப் பெருக்குவதில் இந்தியாவுக்கு அமெரிக்காவும் கனடாவும் மறைமுகமாக ஆதரவு வழங்கி வருகின்றன என்று சர்வதேசச் சட்டம் பற்றிய அமெரிக்க சஞ்சிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அணுச்சக்தி உற்பத்திக்கு முக்கியமானது கதிர்த்தாக்கம் கொண்ட புளுட்டோனியம். இதைப் பயன்படுத்தி அணு ஆயுதங்களும் தயாரிக்கலாம்.

அமெரிக்க உதவியுடன் தாராபூரில் நிறுவப்பட்ட அணுசக்தி நிலையத்தை 1993 இல் இருந்து இராணுவ உற்பத்தித் தரத்துக்கு உயர்த்த இந்தியா திட்டமிட்டுள்ளது.

இந்த புளுட்டோனியத்தை இந்தியாவுக்கு வர்த்தக உடன்படிக்கை ஒன்றின்கீழ் அமெரிக்காவும் கனடாவும் வழங்குகின்றன.

புளுட்டோனியத்தை சமாதான நோக்கங்களுக்குப் பயன்படுத்த வைக்க இந்தியாவைத் தூண்டுவதில் அமெரிக்காவும் கனடாவும் தோல்வி அடைந்து விட்டன.

இப்படி அச் சஞ்சிகை குற்றஞ் சாட்டியிருக்கின்றது. (இ-எ)

### கரிஹார்ட் ஜனநாயகக்கட்சி வேட்பாளர்

வாஷிங்டன், ஆக. 24

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் பதவியைப் பெறும் வாய்ப்பு முன்னாள் செனட்டர் கரி ஹார்ட்டுக்குமீண்டும் கிடைக்கவுள்ளது.

வேட்பாளர் போட்டியில் இவர் முதலில் முன்னணியில் நின்றார் நடிகை ஒருத்தியுடன் உள்ள தொடர்பு வெளியானதைத் தொடர்ந்து இவர் போட்டியில் இருந்து விலகிக் கொண்டார். (இ-எ)

### பவேரியாவில் ஊர்வலம் தடை

பேர்லின், ஆக 24

புதன்கிழமை நடைபெறவுள்ள நாஸிக் குற்றவாளி ருடோல் ஹெஸ்ஸின் இறுதிக் கிரியைகளுக்காக மேற்கு ஜெர்மன் நகரான பவேரியாவில் ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்களுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

நாஸி எதிர்ப்பு, ஆதரவு இயக்கங்கள் மோதிக் கொள்வதைத் தடுக்கும் நோக்கத்துடன் இப்பாது காப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. (இ-எ)

## மகளை பாடசாலைக்கு ஒழுங்காக அனுப்பாத பெற்றோருக்குத் தண்டனை

டென்வர், ஆக. 24

15 வயது மகளைப் பாடசாலைக்கு ஒழுங்காக அனுப்பத் தவறிய பெற்றோருக்கு கொலராடோ நீதிமன்றம் ஒன்று சிறைத் தண்டனை விதித்தது.

அந்த மாணவி 43 தினங்கள் வகுப்புகளுக்கு ஒழுங்காகச் செல்லவில்லை. 19 தரம் பாடசாலைக்கு நேரம்தாமதித்துச்சென்றாள்.

மண்டாலய் கனிஷ்ட மேல்நிலைப் பள்ளியில் அவள் படித்து வந்தாள்.

16 வயதுவரை பாடசாலைக்கு கட்டாயம் சமுகமளிக்க வேண்டும் என்று 1963 இல் நிறைவேற்றப்பட்ட சட்டத்தை மீறிவிட்டாள் என்று மாணவி மீது குற்றம் சுமத்தப்பட்டது,

அரச தடுப்பு நிலையத்தில் ஒரு மாதம் கழிக்கும்படி மாணவிக்கு உத்தரவிடப்பட்டது.

தந்தை அல்பிரட் பிரையன்டுக்கு 10 நாள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

தாய் ஜேனிஸுக்கு 30 நாள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இதைவிடப் பெற்றோருக்கு 300 அமெரிக்க டாலர் அபராதமாக விதிக்கப்பட்டது. (இ-எ)

## சட்டசபைக்குள் கஞ்சா கொண்டு வந்த எம். எல். ஏ.

### சபாநாயகர் கண்டித்தார்

திருவனந்தபுரம், ஆகஸ்ட் 23

கஞ்சாவை சட்டசபைக் கூட்டத்துக்குக் கொண்டுபோன எம். எல். ஏ. ஒருவரைக் கேரள சட்டசபைச் சபாநாயகர் வர்கலை இராதாகிருஷ்ணன் வன்மையாகக் கண்டித்தார்.

கேரள காங்கிரஸ் எம். எல். ஏ. யான மத்தியூ ஸ்டீபன் கஞ்சா பீடி, கஞ்சா அடைக்கப்பட்ட தீப்பெட்டி ஆகியவற்றைச் சபையில் சமர்ப்பித்தார்.

தடை செய்யப்பட்ட இப்பொருள் கன் மாநிலத்தில் தாராளமாகக் கிடைப்பதை நிரூபிக்கவே இவற்றைச் சமர்ப்பிப்பதாக திரு. ஸ்டீபன் தெரிவித்தார்.

கஞ்சாவை வைத்திருப்பதே கிரிமினல் குற்றம் என்று கூறிய சபாநாயகர், எம். எல். ஏயைக் கண்டித்தார்.

இளம் வயது, முதல் தடவையாகத் தெரிவு செய்யப்பட்டவர் என்பதால் மேல் நடவடிக்கை எடுக்க விரும்பவில்லை என்று சபாநாயகர் சொன்னார். (இ-எ)

## வெளி உலகில்

## இந்திய விமானங்கள் பங்களாதேஷில்தரித்துச்செல்ல அனுமதிக்கப் படுமா?

டாக்கா, ஆக. 24

இந்திய - சீன யுத்தம் ஒன்று ஏற்படின் இந்திய விமானங்கள் பங்களாதேஷ் விமான நிலையங்களில் தரித்துச் செல்ல அனுமதிக்கப்படுமா?

பங்களாதேஷ் அதிபர் முகமட் எர்ஷாட் சீனாவுக்குச் சென்றிருந்த போது அப்படி அனுமதிக்கப்பட மாட்டாது என்று சீனத்தலைவர்களிடம் உறுதிமொழி அளித்தார் என்று சர்வதேச சஞ்சிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இது இந்திய அரசு அதிகாரிகள் மத்தியில் பலத்த அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

அப்படி அதிபர் எர்ஷாட் சீனத்தலைவர்களிடம் உறுதி கூறவில்லை என்று பங்களாதேஷ் அரசு அதிகாரிகள் மறுத்தும் இந்திய அரசு அதிகாரிகள் திருப்தி அடையவில்லை.

பங்களாதேஷ் பிறந்த பின்னர் இந்தியாவுடன் செய்து கொண்ட 25 வருட நட்புறவு உடன்படிக்கையின் கீழ் இந்திய விமானங்கள் பங்களாதேஷ் விமான நிலையங்களில் தரித்துச் செல்ல இடமளிக்கப்பட வேண்டும். (இ-எ)

### ராஜீவ் பேசுவார்

இந்திய- இலங்கை ஒப்பந்தம்பற்றி பிரதமர் ராஜீவ்காந்தி கன்னியாகுமரியில் அடுத்தமாதம் முதலாம் திகதி நடைபெறவிருக்கும் பொதுக் கூட்டத்தில் விளக்குவார்.

இப்படி இந்திரா காங்கிரஸ் தலைமை அலுவலகம் அறிவித்திருக்கின்றது. (இ-எ)

### இந்திரா கொலைவழக்கு

## அப்பீல் மனு மீதான விசாரணை செப். 22இல்

புதுடில்லி, ஆக. 24

இந்திரா காந்திகொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட மூன்று எதிரிகளின் அப்பீல் மனுக்கள் விசாரணை அடுத்த மாதம் 22 ஆம் திகதி ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டது.

புதுடில்லி உயர் நீதிமன்றத்தில் கடந்த வாரம் திகதி நிர்ணயிக்கப்பட்டது.

சத்வன்ட் சிங், கெஹர் சிங், பல்பிர் சிங் ஆகியோர் மீது புதுடில்லி நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது இதைப் பின்னர் மேல்நீதி மன்றம் ஊர்ஜிதம் செய்தது. உயர்நீதிமன்ற சாரணையின்போது கெஹர்சிங், பல்பீர் சிங் ஆகியோருக்காக இலவசமாக வாதாடப்போவதாக பிரபல வழக்கறிஞர் ராம் ஜெத்மலானி அறிவித்திருக்கின்றார்.

சத்வன்ந் சிங்குக்காக வழக்கறிஞர் ஆர். எஸ். சோதி ஆஜராகின்றார்.

மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஜி இராமசாமி அரச தரப்பில் வாதாடுவார். (இ-எ)

### 5 இலங்கையரை திருப்பி அனுப்புவது தாமதம்

லண்டன், ஆக. 24

ஐந்து இலங்கைத் தமிழரை கொழும்புக்குத் திருப்பி அனுப்பும் திட்டத்தை பிரிட்டிஷ் உள்துறை அதிகாரிகள் தாமதப்படுத்தியுள்ளனர்.

ஐந்து பேரில் ஒருவர் சார்பில் மேல்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு ஒன்றை நீதிபதி விசாரணைக்கு அனுமதித்ததைத் தொடர்ந்து, சனிக்கிழமை திருப்பி அனுப்பும் திட்டத்தை பிரிட்டிஷ் அதிகாரிகள் ஒத்திவைத்தனர்.

ஐந்து தமிழரும் பொலீஸ் நிலையம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (இ-எ)

### பிஜியில் காட்டுத் தீ!

சுவா, ஆக. 24

பிஜியில் காட்டுத் தீ பரவி பெரும் சேதத்தை ஏற்படுத்தி உள்ளது.

கடந்த 20 ஆண்டுகளில் ஏற்பட்ட மிகப்பெரிய தீ இதுஎன்றுவர்ணிக்கப் படுகிறது.

அரசியல் பின்னணி இத் தீபரவுவதற்குக் காரணமாக உள்ளது என்று வனத்திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

பிஜியின் மேற்குப்பகுதியில் உள்ள உயிட்டிலெவு பிரதேசத்தில் 50 லட்சம் பைன் மரங்கள் இத்தீயினால் சாம்பராகி விட்டன என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

### 600 கிலோ எடையுள்ள முட்டைப் பொரியல்

பட்றோன் (ஸ்பெயின்) ஆக. 24

600 கிலோ எடை கொண்ட முட்டைப் பொரியல் கின்னஸ் உலகசாதனைப் புத்தகத்திலும் இடம்பெற்று விட்டது

இதுதான் உலகிலேயே மிகப்பெரிய முட்டைப் பொரியல்.

5000 முட்டைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டது இப்பொரியல்.

20 தொன் பாரம் கொண்ட கிரேன், இதனைத் தூக்கிச் செல்லத் தேவைப்பட்டது.

பொரியலைத்தயாரித்த அன்ரோனியோ ரிபைரோ இத்தகவலைத் தெரிவித்தார்- (இ-எ)

### அரசியலுடன் சமயம் கலப்பு:

## இலங்கையை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்

### சிங்கைப் பிரதமர் சொல்கிறார்

சிங்கப்பூர், ஆக. 24

அரசியலுடன் சமயத்தைக் கலப்பதில் உள்ள ஆபத்துக்கு இலங்கையை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

சிங்கப்பூர் மக்களுக்குச் சிங்கப்பூர் பிரதமர் லீகுவான் யூ முன்கண்டவாறு தெரிவித்தார்.

1956 இல் நான் முதல் முதலாகக் கொழும்பு சென்றேன். மகிழ்ச்சியும் அமைதியும் நிறைந்த இடமாக அது இருந்தது.

சிங்கப்பூரிலும் பார்க்க சிறந்த இடமாக இலங்கை இருந்தது.

ஒரு ஆள் - ஒரு வாக்கு [illegible] இலங்கையிலிருந்து வருகின்றது.

புலிகள் பஸ் நிலையங்களுக்குக் குண்டு வைத்தனர்; இலங்கை அரசின் விமானங்கள் யாழ்ப்பாணத்தில் சொந்த மக்கள் மீது குண்டு வீசின.

அத்துடன் ஒரு ஆள்- ஒரு வாக்குமுறை முடிந்தது.

அந்த முறை போய் ஒரு துப்பாக்கி - ஒரு வாக்குமுறை வந்தது.

விரைவில் ஒரு குண்டு- ஒரு வாக்குமுறை இலங்கையில் வரும்.

இப்படி திரு. லீ தெரிவித்தார். (இ-எ)

### பரிசோதனை அறிக்கை

கொழும்பு, ஆக. 25

எம். பிக்கள், அமைச்சர்கள் ஆகியோரின் பாதுகாப்பு அதிகாரிகளின் ரைபிள்கள் பற்றிய பரிசோதனை அறிக்கையை இரகசியப் பொலீஸார் எதிர்பார்த்து உள்ளனர்.

அரசாங்க இரசாயனப் பரிசோதகர் அறிக்கையைத் தயாரிப்பதில் ஈடுபட்டிருக்கின்றார். (எ)

### சென்ஜேம்ஸ் நாளை திறக்கப்படுகிறது

குருநகர், ஆக. 25

குருநகர் புனித ஜேம்ஸ் மகாவித்தியாலயம் நாளை 26 ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் மூன்றாம் தவணைக்காகத் திறக்கப்படவுள்ளது.

யாழ் - கோட்டை, மண்டை தீவு 'மினி' முகாம்களில் இருந்து நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களில் எட்டுப் பேர் உயிரிழந்த சம்பவத்தை அடுத்து இரண்டாம் தவணை காலம் கடந்து பாஷையூர் பாடசாலை ஒன்றில் பகுதி நேரமாக நடத்தப்பட்டு வந்தது.

அமைதி நிலைமையைத் தொடர்ந்து மூன்றும் தவணைக் கல்வியை மேற்படி வித்தியாலயத்தில் தொடர உள்ளதாக வித்தியாலய அதிபர் திரு. அ. ஸ்ரனிஸ்லோஸ் 'உதயன்' நிருபரிடம் தெரிவித்தார்.

### லண்டனில் உள்ள

## இலங்கையர் சங்க தலைவர் விசாரணையில்

லண்டன், ஆக.24

லண்டனில் உள்ள இலங்கையர் சங்கம் ஒன்றின் தலைவர் ஸ்கொட்லந்து யார்ட் பொலீஸாரினால் விசாரணை செய்யப்பட்டார்.

லண்டனில் உள்ள அவரின் வீட்டை ஸ்கொட்லந்து யார்ட் பொலீஸார் சோதனை செய்தனர்.

இச்சங்கத்துக்கு எதிராகப் பல முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன— இப்படி பொலீஸார் தெரிவித்தனர்.

'ஜே. வி. பி. யுடன் தொடர்புண்டா? வன்செயல் பிரசாரத்துக்குத் திட்டமிடப்பட்டதா? ஆகிய கேள்விகள் என்னிடம் கேட்கப்பட்டன'—

விசாரணைக்குஉட்படுத்தப்பட்ட சங்கத்தலைவர் பின்னர் இப்படிக் கூறினார். (இ-எ)

### மீண்டும் திறக்கப்படும்

யாழ்ப்பாணம் ஆக 25

யாழ்ப்பாணம் கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் விரைவில் மீண்டும் திறக்கப்படவுள்ளது.

இதற்கான முயற்சிகள் அவசர அவசரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நீண்டகாலமாக இது முடப்பட்டிருந்தது.

இங்கு விற்பனை செய்வதற்குத் தேவையான பொருள்கள் கொழும்பில் இருந்து வந்தவுடன் இந்த விற்பனை நிலையம் திறந்து வைக்கப்படும். (இ-7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடந்த ஞாயிறு நடைபெற்ற இலங்கை வங்கியின் ''பிள்ளைகள் சேமிப்புத்திட்ட'' அறிமுக விழாவில் இலங்கை வங்கியின் யாழ் மாவட்ட முகாமையாளர் சாம் அரியரத்தினம் மங்கள விளக்கேற்றுகிறார். படத்தில் மற்றும் திரு. எம். கனகரத்தினம், திரு. செ. சிறீரங்கநாதன், திரு. வீ. கே. பரமசாமி, திரு. எஸ். கே. மனமோகன், எஸ். கே. மங்களமூர்த்தி ஆகியோரும் ஏனைய பிரமுகர்களும் காணப்படுகின்றனர்.

### இலங்கை வங்கி அறிமுகப்படுத்துகிறது

# உங்கள் பிள்ளைகளுக்கும் சேமிப்புத் திட்டம்

நாடும், நாமும் சற்று நிம்மதியாக, ஒழுங்கான வாழ்க்கை முறைகளை அமைத்து வரும்போது சேமிப்பைப் பற்றியும், எமது எதிர் காலத்தைப் பற்றியும், எமது மழலைச் செல்வங்களின் பாதுகாப்பான, ஒளிமயமான வருங்காலத்தைப் பற்றியும் எண்ணிப் பார்க்கிறோம்!

அன்றும், இன்றும், என்றும், நல்லதையே நல்கி, நல்லோர் பலரை, உருவாக்கி, பலரின் எதிர் காலத்தை மகோன்னதமாக்கி மக்கள் சேவையே மகேசன்சேவையென்ற உள் நோக்குடன் எத்தனையோ நல்ல திட்டங்களை நல்கிய இலங்கை வங்கி அனைத்து சிறு பிள்ளைகளின் வருங்கால நன்மை கருதி ''பிள்ளைகள் சேமிப்புத்திட்டம்'' என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது.

பல்வேறு பழைய சேமிப்புத் திட்டங்களிலிருந்து வேறுபட்டு, புதிய கவர்ச்சிகரமான சலுகைகளுடன் முன்பைவிட அதிகமான வட்டி விகிதத்துடன் வயதின்படி அளவிடாது, வாசிக்க, எழுத, விளங்கிக் கொள்ளக் கூடிய விதத்தில் தனது சொந்தக் கணக்கை பதினாறுவயதிற் குட்பட்ட எவரும் ஆரம்பிக்கலாம்- இவர்கள் தமது பணத்தை தமது பதினெட்டு வயதில் மீளப் பெறுதல் கூடும்.

#### உங்கள் தகவலுக்கு

அகில இலங்கையிலும் உள்ள எந்தவொரு இலங்கைக் கிளையிலும் இலங்கையர்களான பெற்றோர் அல்லது பாதுகாவலர் தங்கள் பிள்ளைகளுக்காக இந்த அருமையான புதிய சேமிப்புத் திட்டத்தை நூறு ரூபா ஆரம்பத்துடன் இலகுவாகஆரம்பிக்க முடியும்.

இந்தப் புதிய திட்டத்தில் சேமிப்புக் கணக்கு வைத்திருப்போர் தமது பிறந்த நாளின் போது வட்டியுடன் சேர்த்து நிலுவை குறிக்கப்பட்ட ஒரு அழகிய பிறந்த நாள்வாழ்த்தைஇலங்கை வங்கியிடமிருந்து வருடா வருடம் பெறுவார்கள்!

சேமித்த பணம் பிள்ளையின் கல்வி, திருமணம், நோய் போன்ற அத்தியாவசிய தேவைகளுக்காக மீளப் பெற வேண்டுமா?

எத்தனையோ உதவிகளைச் செய்யும் இலங்கை வங்கி அதையும்செய்யும்! எனவே எமது மழலைச் செல்வங்களின் இன்றைய சேமிப்பு' அவர்களது நாளைய பாதுகாப்பாக விளங்கும் என்ற நம்பிக்கை இப்புதிய திட்டத்தின் மூலம் வெள்ளிடை மலையே!

-ஆ' இரகுபதி பாலஸ்ரீதரன்.

## வாசகர் திருமுகம்

### வீதிப் போக்குவரத்தில் ஒழுங்குமுறை வேண்டும்

நாட்டின் நிலைமையில் ஏற்பட்ட மாற்றத்தைத் தொடர்ந்து மக்களினதும் வாகனங்களினதும் நடமாட்டம் மிகவும் அதிகரித்துள்ளது.

இச்சூழ் நிலையில் வீதி ஒழுங்குமுறைகள் பின்பற்றப்படாத அவலநிலை தொடர்பாக இக்கடிதத்தைத் தங்களுக்கு எழுதுகின்றேன்.

மக்களினதும், வாகனங்களினதும்— சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள், பஸ்கள், மினி பஸ்கள், லொறிகள் என்பனவற்றினதும்— நடமாட்டம் யாழ்நகரில் அதிகரித்து வருகின்றது. சில வீதிகள், மிகவும் ஒடுக்கமான காரணத்தினால் முன்னர் ஒருவழிப்பாதைகளாகப் பாவிக்கப்பட்டன.

அந்த 'ஒரு வழிப்பாதை' அறிவிப்புப் பலகைகள் இன்றும் காணப்படுகின்றன! ஆனால் நடைமுறையில் அப்பாதைகள் ''இருவழிப்பாதை''களாகவே தற்போது பாவிக்கப்படுகின்றதை அவதானிக்கலாம்!

அநாவசிய தாமதத்தையும், இழப்புக்களையும் தவிர்ப்பதற்கு வீதிவிதிமுறைகளைப் பின்பற்றப் பொதுமக்கள் முன்வரவேண்டும்.

அத்துடன் இதனை நடைமுறைப் படுத்த ஏற்ற ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படுதல் அவசியமானதும் அவசரமானதுமாகும்.

ப. மகேந்திரதாசன்

மானிப்பாய்.

### துர்நாற்றம் வீசும் மர்மம் என்ன?

இராணுவத்தினர் விட்டு வெளியேறிய கடை ஒன்றில் இரத்தக் கறைபடிந்தஷேர்ட் காற்சட்டை என்பனகிடைப்பதாகவும்அங்கு துர்நாற்றம்வீசுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி இராணுவத்தினரால் பாவிக்கப்பட்ட வர்த்தக நிலையம் ஒன்றை விட்டு இராணுவத்தினர் வெளியேறிய பின்னர் கடை உரிமையாளர் அங்கு சென்று அடிக்கடி பார்த்து வந்தார்.

திடீரென ஒரு நாள் அக் கடைக் கட்டடத்தினுள் இரத்தக் கறை, படிந்தஉடுப்புகள் இருப்பதை அவதானித்ததாகவும், அக் கடைக்குள் தற்போது துர்நாற்றம் வீசுவதாகவும் தெரிய வந்துள்ளது.

தற்போதும் இராணுவத்தினர் நடமாடிவரும் இவ்விடத்தில் யாருக்கு என்ன நேர்ந்தது என்பதனை அறியாது மக்கள் அங்கலாய்க்கின்றனர்.



### பொய்யாமொழி

**குறள்:**
அரியஎன்று ஆகாத இல்லைபொச் சாவாக்
கருவியால் போற்றிச் செயின்.

**பொருள்:**

மறவாமை என்னும் கருவி கொண்டு (கடமைகளைப்) போற்றிச் செய்தால், செய்வதற்கு அரியவை என்று ஒருவனால் முடியாத செயல்களே இல்லை.

# புதிய ஒப்பந்தம் சமஷ்டிக்கு வழிவகுக்க மாட்டாது

## ஆதலால் சர்வஜன வாக்கெடுப்பு தேவை இல்லை என்கிறார் கொல்வின்

எண்பது வயதான லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா இந்திய–இலங்கை ஒப்பந்தம் பற்றி கொழும்பு வீக்கெண்ட் பத்திரிகைக்கு அளித்த பேட்டியின் தொகுப்பு இங்கு பிரசுரமாகின்றது.

கேள்வி: 1957 பண்டா–செல்வா ஒப்பந்தம், 1965 டட்லி– செல்வா ஒப்பந்தம் பற்றி எல்லாம் இன்று பேசப்படுகின்றது. இந்த இரண்டுக்கும் எதிராக தற்போதைய சமாதான ஒப்பந்தம் நின்று பிடிக்குமா?

கொல்வின்: முன்னவை இரண்டும் வேறு மட்டத்தில் உருவானவை.

1977 இல் இடம்பெற்ற ஜே. ஆர்– கூட்டணி ஒப்பந்தம் பற்றி ஒருவருக்குமே இன்னும் தெரியாது. இவை எல்லாம் உள்ளூர் ஒப்பந்தங்கள். இரண்டு கட்சிகளின் தலைவர்கள் செய்து கொண்டவை. இந்திய – இலங்கை ஒப்பந்தம் அப்படியானது அல்ல; இரண்டு நாடுகளைக் கட்டுப்படுத்துகிறது. உள்ளூர் அரசியலை மட்டும் இது கட்டுப்படுத்தவில்லை.

கேள்வி: அப்படி என்றால் முந்திய ஒப்பந்தங்களுடன் இதனை ஒப்பிட முடியாது?

கொல்வின்: இல்லை என்பது தான் எனது பதில். 1957, 1965 ஒப்பந்தங்கள் பொதுவானவை. அவற்றில் இருந்து பயனுள்ள சட்ட மூலங்கள் வந்திருக்கலாம்.

கேள்வி: அமுல் நடத்தும் கட்டத்தில் அந்த ஒப்பந்தங்களுக்குப் பிரச்சினைகள் தோன்றின?

கொல்வின்: ஆம். இரண்டு தலைவர்களும் எதிர்ப்புக் காரணமாகத் தங்கள் நிலைப்பாடுகளை மாற்றிக் கொண்டுவிட்டனர்.

கேள்வி: 1957 பண்டா–செல்வா ஒப்பந்தம் பற்றி என்ன சொல்கிறீர்கள்?

கொல்வின்: ஒப்பந்தத்தின் சில பகுதிகள் தெளிவாக இல்லை. காணி சம்பந்தப்பட்ட விஷயம் அவற்றில் ஒன்று. இருந்தும் எமது கட்சி அதை எதிர்க்கவில்லை.

கேள்வி: அந்த ஒப்பந்தம் அமுல் நடத்தப்பட்டிருந்தால் கடந்த நான்கு ஆண்டுகளில் நாம் துன்பம் அடைந்திருக்கவேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது என்று கூறுகின்றீர்களா?

கொல்வின்: பெரும்பாலும் நிச்சயமாக அந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டிருப்பின் பின்னர் கடினமாக மாறிய சில பிரச்சினைகள் குறைந்திருந்து இருக்கும்.

கேள்வி: அப்படியானால் அந்தச் சமயத்தில் மதில் மேல் பூனைக் கொள்கையைக் கடைப்பிடித்த உங்கள் கட்சி. ஒப்பந்தத்தை எதிர்த்தவர்கள் எல்லோரும் ஒருவகையில் இன்றைய துன்பத்துக்குக் காரணம் என்று நீங்கள் கூறுகின்றீர்களா?

கொல்வின்: தான் உருவாக்கிய யோசனைகளை உறுதியாக நின்று அமுல் நடத்தக்கூடிய முதுகெலும்பு திரு. பண்டாரநாயக்காவுக்கு இருக்கவில்லை. அவரின் வீட்டின் முன்னால் மகாசங்கம் முகாமிட்டது. யு என். பி. கண்டிக்குப் பாதயாத்திரை சென்றது. இவற்றினால் பண்டாரநாயக்காவின் மனம் மாறியது. அவர் ஒப்பந்தத்தை நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவந்திருப்பின் நாம் ஆதரித்திருப்போம்.

கேள்வி: டட்லிசெல்வா ஒப்பந்தம்பற்றி...

கொல்வின்: அது வித்தியாசமானது. அது ஒரு இரகசியஒப்பந்தம். அதில் இருந்த விவரங்கள் வெளியிடப்படவில்லை. பின்னர்தான் விவரங்கள் தெரியவந்தன. அதனால் தான் நாம் அவற்றை எதிர்த்தோம். தெரியாத ஒன்றினால் வழிநடத்தப் படுவதை நாம் விரும்பவில்லை.

கேள்வி: தற்போதைய ஒப்பந்தம் போல் அல்லாமல்?

கொல்வின்: இந்த ஒப்பந்தம் பற்றி நாம் கருத்து வெளியிடவில்லை.இன்னும் அதைப் படித்துக் கொண்டிருக்கின்றோம்.

கேள்வி: 1977 தேர்தல் விஞ்ஞாபனத்துக்குப் போவோமே—

கொல்வின்: இன்னும் அது இரகசியமாக உள்ளது. ஜே.ஆர்: கூட்டணிக்கு அப்போது என்ன உறுதிமொழி அளித்தார் என்பது எமக்குத் தெரியவில்லை.

கேள்வி: இந்திய இலங்கை ஒப்பந்தம்...

கொல்வின்: முன்னைய ஒப்பந்தங்களைப் போன்றதல்ல இது.

கேள்வி: மேலும் விளக்கமளிக்க முடியுமா?

கொல்வின்: இது முழுதாக வித்தியாசமான ரகம். இந்த ஒப்பந்தம் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் அமைந்துள்ளது. ஒப்பந்தத்தில் இரண்டு பேர்கையெழுத்திட்டனர்; ஆனால் மூவர் பங்காளிகள்.

ஒப்பந்தத்தில் உள்ள சிலவற்றை நிறைவேற்ற இந்தியா உத்தரவாதம் அளித்துள்ளது. சாதாரணமாக செய்த ஒப்பந்தத்தைச் செயல்படுத்த கைச்சாத்திடும் ஒருவர் உத்தரவாதம் கொடுப்பது இல்லை.

கையெழுத்திடாத மூன்றாவது பங்காளர் ஆயுதம் தரித்த ஈழம் வாதிகள். இவர்களுக்குச் சில உறுதிமொழிகளை இந்தியா வழங்கியுள்ளது.

இந்த அடிப்படையில் பார்த்தால் இது ஒரு தனித்துவமான ஒப்பந்தம்.

கேள்வி: கொண்டு வரப்படவுள்ள அரசமைப்புச் சட்டத் திருத்தத்துக்கு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அங்கீகாரம் பெறப்பட வேண்டுமா?

கொல்வின்: அதுபற்றி உயர்நீதிமன்றம் தான் தீர்மானிக்க வேண்டும்.

கேள்வி: உங்களுடைய தனிப்பட்ட கருத்து என்ன?

கொல்வின்: சர்வஜன வாக்கெடுப்பைத் தவிர்க்கக் கூடிய விதத்தில் தான் ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டுள்ளது. புதிய யோசனைகள் சமஷ்டிக்கு வழி வகுக்கவில்லை. ஆகவே சர்வஜன வாக்கெடுப்புத் தேவை இல்லை. எனது கருத்து இது:

கேள்வி: அரசமைப்புச் சட்டத்தில் உள்ள இரண்டாவது ஷரத்து 'ஒற்றையாட்சிகொண்ட நாடு' என்று கூறுகின்றது. அது மாற்றப்பட வேண்டும் என்று சிலர் கூறுகின்றார்கள். அதற்கு நாட்டில் சர்வசன வாக்கெடுப்பு நடத்த வேண்டுமா?

கொல்வின்: 'ஒற்றையாட்சி நாடு' என்ற பதம் 1972 அரசமைப்புச் சட்டத்தில்தான் பயன்படுத்தப்பட்டது. நான் அதைப் பாவித்தேன். விவரிக்கின்ற வார்த்தைப் பிரயோகமாகத்தான் அது இருந்தது. அதை இந்து ஆலயத்தின் மூலஸ்தானத்தில் உள்ள கடவுளை வணங்குவது போன்று

(5ம் பக்கம் பார்க்க)

## சமய சந்நிதிகளில்

### ஆரோக்கியநாதர் ஆலய உற்சவம்

குருநகர், ஆக. 25

புனிதர் ஆரோக்கிய நாதர் ஆலய வருடாந்தக் கொண்டாட்டங்கள் ஞாயிற்றுக் கிழமை மாலை 5-30 மணிக்கு நடைபெற்ற கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தினமும் மாலை 5-30 மணிக்கு ஆராதனை இடம்பெற்று திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

26 ஆம் திகதி மாலை 5-30 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பித்து நற்கருணை ஆராதனையும் பவனியும் நடைபெறும்.

27-ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6-45 மணிக்கு திருநாள்பாடல் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுத்தல் இடம்பெறும்.

மாலை 5-30 மணிக்கு புனித ஆரோக்கிய நாதரின் திருச்சொரூபப் பவனி நடைபெற்று சொரூப ஆசீர்வாதத்துடன் திருநாள் கொண்டாட்டங்கள் நிறைவு பெறுமென பங்குத் [illegible] நேசன் அடிகளார் தெரிவித்தார். (இ-51)


# இலவசம்!
# விளம்பரம் ஒன்று இலவசம்!!

**துரிதமாக விற்க! வாங்க!**

**மாற்றீடு செய்ய!!**

**இந்த அரிய சந்தர்ப்பம் சில நாட்களுக்கே!**

**ஒரு செலவில் இரு விளம்பரங்கள்!!**

கல்வி, பிறந்தநாள் வாழ்த்துக்கள், விற்பனை, தேவை, மணப்பந்தல், காணி விற்பனை, வேலைவாய்ப்பு இவைகளில் எவையாயினும் புதன், ஞாயிறு உதயன் ''சின்னஞ்சிறு விளம்பர''ப் பகுதியில் விளம்பரப்படுத்துவதன்மூலம் அதிக பயனடையுங்கள்.

★ நீங்கள் செய்யவேண்டியது இதுவே:

1. உங்கள் விளம்பரத்தை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள சலுகைக் கட்டணக் கூப்பனில் எழுதுங்கள்.
2. சொற்களைக் கணக்கிட்டுச் செலவைக் கணியுங்கள்.
3. பூர்த்திசெய்த விண்ணப்பத்தையும் பணத்தையும், விளம்பரப் பகுதி: நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட், 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் சமர்ப்பியுங்கள்.

★ இந்தக் கூப்பனில் பதியப்பட்டு பணம் செலுத்தப்பட்ட ஒவ்வொரு விளம்பரமும் இலவசமாக மீள்பிரசுரிக்கப்படும். இச்சலுகை 1987 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30ஆம் திகதி வரையுமே செல்லுபடியாகும்.

**எமது விளம்பரக் கட்டணம்:**

முதல் 20 சொற்கள் ரூபா 15-00
மேலதிக ஒவ்வொரு சொற்களுக்கும் 50 சதம்
(ஆகக் கூடிய சொற்கள் 35)

★ ''மேற்பார்த்து'' குறிப்புடைய விளம்பரங்களுக்கு விளம்பர முழுக் கட்டணத்துடன் ரூபா 10-00 மேலதிகமாக அறவிடப்படும். விளம்பரதாரர்கள் நேரடியாகக் காரியாலயத்துக்குவந்து கடிதங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**சின்னஞ்சிறு விளம்பரம் உதயன்**
**சலுகைக் கட்டணக் கூப்பன்**

பிரசுரிக்க வேண்டிய திகதி:-..........

பகுதி:-..........

இலவசமாக மறுபிரசுரம் செய்ய விரும்பும் திகதி:-..........

பெயர் :-..........

விலாசம்:-..........

..........

சொற்கள்:..........செலவுத் தொகை: ..........

திகதி,-..........

..........
கையொப்பம்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### மாதிரிச் செய்கை

கிளிநொச்சி ஆக. 25

யாழ் மாவட்டத்தில் பிரபல்யம் அடைந்து வரும் கரணைக்கிழங்குச் செய்கையினை கிளிநொச்சி மாவட்டத்திலும் ஊக்குவிக்கும் நோக்குடன் கிளிநொச்சியிலுள்ள நான்கு கிராமங்களில் கரணைக்கிழங்கு மாதிரிச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி உதவி விவசாயப் பணிப்பாளர் பணிமனையின் கீழ் வரும் திருவையாறு, கனகாம்பிகை, கோணாவில், வட்டக்கச்சி ஆகிய இடங்களிலேயே இம்மாதிரிச் செய்கை நடைமுறைப் படுத்தப்படுகிறது. (உ-76)

### பழைய இடங்களுக்கும் திரும்புகின்றனர்

மட்டக்களப்பு, ஆக. 25

வன்செயல்கள், அச்சுறுத்தல்கள் காரணமாக இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்திருந்த திருமலை மாவட்ட எல்லைக்கிராம தமிழ்க் குடியிருப்பாளர்கள் மீண்டும் தமது பழைய இடங்களுக்குத் திரும்பியுள்ளார்கள்.

ஈச்சிலம்பத்தை, வெருகல், முகத்துவாரம், பூமரத்தடிச்சேனை, பூநகர் உட்பட சேருவில தொகுதியிலுள்ள தமிழ் கிராம வாசிகளே தமது இடங்களுக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். (உ-21)

★ வடக்கு-கிழக்கு

# எல்லைப் பகுதிகளுக்கு இந்திய அமைதிப்படை

## மீளக் குடியேறும் மக்களுக்குப் பாதுகாப்பு

இலங்கை வந்துள்ள இந்தியசமாதானப்படை பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக வடக்கு-கிழக்கு எல்லைக் கிராமங்களுக்கும் அனுப்பி வைக்கப்படவிருக்கின்றது

சில எல்லைக் கிராமங்களில் மீளக் குடியமரச் சென்ற தமிழ் குடியிருப்பாளர்களுக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

இதனால் இக்குடியிருப்பாளர்கள்மீளக்குடியமர தயக்கம் காட்டுகின்றனர் என்று மட்டக்களப்பு, திருமலை பிரசைகள் குழுக்கள் இந்திய சமாதானப் படையினரின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளன.

அதைத்தொடர்ந்து இந்தியசமாதானப் படையினர்எல்லைப் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-21)

### சுவரொட்டியுடன் சென்றவர் தாக்கப்பட்டார்

சுவரொட்டி கொண்டு சென்ற தமிழ் இளைஞரை ரோந்து சென்ற இலங்கைப் பொலிஸார் கடுமையாகத் தாக்கினர்.

திருகோணமலை நகரில் கடந்த 14ஆம் திகதி காலை இச்சம்பவம் இடம் பெற்றது.

மயக்கம் அடையும் வரை அந்த இளைஞர் தாக்கப்பட்டாராம்.

பின்னர் அவரை டாக்ஸி ஒன்றில் ஏற்றி பொலிஸார் கொண்டு சென்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக இளைஞனின் உறவினர்கள் திருகோணமலை நகரசபையில் இயங்கும் இந்திய இராணுவத்தின் பொதுசனத் தொடர்பு அலுவலகத்தில் முறையிட்டனர். (இ-எ-150)

கிழக்கு

## பல்கலைக்கழகத்தில் புதிதாக 2 பீடங்கள்

அம்பாறை, ஆக. 25

கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்தில் புதிதாக இரு பீடங்கள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளன.

ஏற்கனவே இருந்து வரும் விஞ்ஞான பீடம், விவசாய பீடம் என்பவற்றோடு புதிதாக வர்த்தக முகாமைத்துவ பீடமும், கலாசார கற்கை நெறி பீடமும் ஆரம்பிக்கப்பட்டு உள்ளன.

வர்த்தக, முகாமைத்துவ பீடத்தின் கீழ் பொருளியல், வர்த்தகம், முகாமைத்துவம் ஆகிய மூன்று துறைகளும்—

கலாசார கற்கை நெறி பீடத்தின் கீழ் நுண்கலை, அரபு, ஸ்லாமிய கற்கை நெறி ஆகிய மூன்று துறைகளும் நிறுவப்பட்டு உள்ளன. (ஒ-14-21)

## மீண்டும் இரண்டுநேர பாடசாலை

பலாலி, ஆக. 25

யாழ்ப்பாணக் கல்வி மாவட்டப் பாடசாலைகளில் முன்பு இரண்டு நேரப் பாடசாலைகளாக இயங்கிய அனைத்துப் பாடசாலைகளும் முன்னும் தவணை தொடக்கம் மீண்டும் இரண்டு நேர பாடசாலைகளாக இயங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாடசாலை அதிபர்களை யாழ். கல்விப் பணிப்பாளர் பணித்துள்ளார்.

காங்கேசன்துறைக் கல்வி வட்டாரத்தில் நடைபெற்ற அதிபர்கள் கூட்டத்தில் இதனைப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதன்படி காங்கேசன் துறைக்கல்வி வட்டாரத்தில் அருணோதயாக் கல்லூரி, இளவாலை கன்னியர்மடம் மகாவித்தியாலயம், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, மல்லாகம் மகா வித்தியாலயம், தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி, காங்கேசன்துறை மகா வித்தியாலயம்,இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம், மயிலிட்டி வடக்கு கலைமகள் மகா வித்தியாலயம் வீமன்காமம் மகாவித்தியாலயம், பலாலி சித்திவிநாயகர் வித்தியாலயம் என்பன இரண்டு நேரப் பாடசாலைகளாக இயங்க வேண்டுமெனக் கல்விப் பணிப்பாளர் பணித்துள்ளார். (இ-119)

## வடமராட்சி மக்கள் துயர் துடைப்பு அலுவலகம்

பருத்தித்துறை, ஆக. 25

வடமராட்சி மக்கள் துயர்துடைக்க மக்கள் அலுவலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

வடமராட்சியில் 26 - 05 - 87 முதல் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது ஏற்பட்ட பாதிப்புகள், இழப்புகளை மதிப்பீடு செய்யவும், சம்பந்தப் பட்டவர்களுக்கு நிவாரணம் பெற உதவவும் மக்கள் நலன் கருதி வடமராட்சியில் ஒரு துணைஅலுவலகம் நிறுவப்பட்டுள்ளது.

இந்த அலுவலகம் சனி, ஞாயிறு தினங்களில் காலை 9 மணி முதல் நண்பகல் 1-00 மணி வரை புலோலி பசுபதீஸ்வரர் ஆலய, சிவன் கோவில்,பார்வதவர்த்தினி கலா மண்டபத்தில்இயங்குமென மனிதஉரிமைகள் அமையத்தின் பிரதிநிதி திரு. ஆ.தேவராஜாதெரிவித்தார். (இ-118)

## மின் வெட்டு நீடிக்கலாம்

கொழும்பு, ஆக. 25

மின்வெட்டு இன்னும் ஒரு மாதம் நீடிக்கலாம்.

இலங்கை மின்சார சபை உயர் அதிகாரி ஆனந்த செனவிரத்ன முன்கண்டவாறு தெரிவித்தார்.

நீர்த் தேக்கங்களில் எட்டுச் சதவீத நீரே உள்ளது. இது 15 சதவீதமாக அதிகரிக்கும் வரை மின்வெட்டை நீக்குவது பற்றி நினைக்கவே முடியாது—

இப்படி அவர் மேலும் சொன்னார். (இ-எ)

புதுக்குடியிருப்புக்கு

## ஆண்டு இறுதிக்குள் மின்வசதி கிடைக்கும்

புதுக்குடியிருப்பு கிராமத்திற்கு இந்த ஆண்டு இறுதிக்குள்மின்விநியோகம் கிடைக்கும்.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி சபையின் பிரதிச் செயலாளரும் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளருமான திரு. சு. தீவகலால் கிராமோதய சபைத்தலைவர்களுடன் நடத்திய கூட்டம் ஒன்றில் இத்தகவலை வெளியிட்டார்.

ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தித் திட்ட நிதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட இவ்வேலை இனி வரும் காலங்களில் துரித கதியில் நடைபெற என்னாலான முயற்சிகளை மேற்கொள்வேன்.

மேலும் அடுத்த ஆண்டு பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் இருந்து நூலகம், சிறுவர் பூங்கா, மாதிரிச் சந்தை என்பன அமைப்பதற்கும் முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

### கூட்டெருக்கிடங்கு அமைக்க ஊக்குவிப்பு

பளை, கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இருபத்தாறு கூட்டெருக்கிடங்குகள் அமைக்கப்படவுள்ளன.

பயிர்ச் செய்கையில் கூட்டெருவின் பிரயோசனத்தினை அறிமுகப் படுத்தும் நோக்குடன் அமைக்கப்படும் இக்கூட்டெருகிடங்கு ஒவ்வொன்றுக்கும் ஊக்குவிப்புப் பணமாக கிளிநொச்சி மக்களுக்கு 250 ரூபாவும் பளைப்பகுதி மக்களுக்கு 350 ரூபாவும் வழங்கப்படும்.

## வடக்கு — கிழக்கு இணைப்புக் குறித்து

### கல்முனையில் நடந்த கருத்தரங்கு

கல்முனை, ஆக. 25

வடக்கு-கிழக்கு இணைப்பை அதிகமான முஸ்லிம் பிரமுகர்கள் எதிர்த்துக் கருத்துத் தெரிவித்தனர். ஆனால் மாவட்ட அமைச்சர் ஜனாப் ஏ.ஆர். மன்சூர் ஆதரித்துக் கருத்து வெளியிட்டார்.

வடக்கும், கிழக்கும் இணைந்த மாநில ஆட்சி முஸ்லிம்களுக்கு வேண்டுமா, வேண்டாமா என்பது சம்பந்தமான முஸ்லிம் பிரமுகர்களின் கருத்தரங்கு கல்முனை மொகமட் வாலிகா மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில், கல்முனை எம். பியும், முல்லைத்தீவு மாவட்ட அமைச்சருமான ஜனாப். ஏ. ஆர். மன்சூர், அம்பாறை மாவட்ட அபிவிருத்திச் சபையின் தலைவர் ஜனாப். எம். எச். ஜவ்பர், இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத் தலைவர் ஜனாப். பாவா, மட்டக்களப்பு பல்கலைக்கழகப் பதிவாளர் நாயகம் ஜனாப். எஸ். எச். எம். ஜெமீல். கல்முனை சாஹிராக் கல்லூரி அதிபர் ஜனாப். எம். சி. ஆதம்பாவா, முகமட் வாலிகா, அதிபர் ஜனாப். பசிர், கரவாகு மேற்கு உப அலுவலக அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஜனாப். ஏ. ஏ. சபூர் மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

இதில் கல்முனை எம்.பி. பேசுகையில்:

'இங்கு இருப்பவர்கள் எல்லோரும் சொல்கிறீர்கள் சிங்களவர்களுடன் இணைந்தால் ஆபத்து என்று. இதே நேரம் நாம் தமிழ் மக்கள் உரிமைகளைத் தரும்போது அவர்களுடன் இணைந்தால் என்ன? என்று கேட்டார்.

இதற்கு அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஜனாப் ஏ. ஏ. சபூரைத் தவிர மற்றவர்கள் அனைவரும் இணைப்பை எதிர்த்துக் கருத்துத் தெரிவித்தனர். (இ-...)

### கேள்விப்பத்திரம்

**Lanka Cement Limited**

Kankesanthurai.

பொதி நிரப்பும் பகுதியிலிருந்து (PACKING PLANT)
துறைமுகத்திற்குச் (HARBOUR
சீமெந்து கொண்டு செல்லுதல்.
லொறியிலிருந்து இறக்குதல்.
கப்பலுக்குள் ஏற்றி அடுக்குதல்.
ஆகியவற்றிற்கான கேள்விப் பத்திரம்(TENDER)

TENDER No: LCL/H/T/01/87

காங்கேசன்துறையில் உள்ள எமது சீமெந்துத் தொழிற்சாலையின் பொதி நிரப்பும்-பகுதியிலிருந்து (PACKING PLANT) துறைமுகத்திற்குச் (HARBOUR) சீமெந்து கொண்டு செல்லுதல், லொறியிலிருந்து இறக்குதல், கப்பலுக்குள் ஏற்றி அடுக்குதல் ஆகியவற்றிற்கான கேள்விப் பத்திரங்கள் (TENDERS) கோரப்படவுள்ளன.

மேற்படி கேள்விப் பத்திரங்கள் (Tender-Documents) விநியோக அதிகாரியின் காரியாலயத்தில் சாதாரண வேலை நாட்களில் காலை 8-30 முதல் மாலை 4-00 வரையிலும் 29-8-87 சனிக்கிழமை பகல் 12-00மணிவரையும் மீளப் பெறமுடியாத வைப்புப் பணமாக ரூபா 50/- செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் 03 - 09 - 87 மாலை 4-00 மணி வரை விநியோகிக்கப்படும்.

கேள்விப்பத்திரதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 04 - 9 - 1987 முற்பகல் 10-00 மணிக்கு கேள்விப்பத்திரதாரர் முன்னிலையில் திறக்கப்படும்.

பிரதிப் பொதுமுகாமையாளர்
லங்கா சீமெந்து லிமிட்டெட்,
காங்கேசன்துறை.

22.8.1987

### மக்கள் முகம்

#### காரைநகர் ப. நோ. கூ. ச.

காரைநகர், ஆக. 25

காரைநகர் பலநோக்கு கூட்டுறவுச்சங்க புதிய நிர்வாகிகளுக்கான பொதுக்கூட்டம் சங்கத் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.

புதிய நிர்வாகிகள் வருமாறு:

தலைவர்: திரு. எஸ்.பாலசிங்கம் உபதலைவர்: திரு. ஏ. சதாசிவம் செயலாளர்: செல்வி க. லட்சுமி உபசெயலாளர்: திரு. செ. கோடிலிங்கம் பொருளாளர்: திரு. ப. நடராசா கணக்காய்வாளர்: திரு. க. தேவராசா

செயற்குழு உறுப்பினர்கள் நான்கு பேரும் தெரிவு செய்யப்பட்டனர். (இ-73)

#### திருவந்தாதி நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஆக.25

கற்பக விநாயகர் திருவந்தாதியைச் செய்ததன்மூலம் எனக்கு ஆத்ம திருப்தி உண்டாகி மிகவும் களிப்படைகின்றேன்,

கற்பகவிநாயகர் திருவந்தாதி நூல் வெளியீட்டு விழாவில் அதன் ஆசிரியர், புலவர் செ. ஐயாத்துரை இவ்வாறு குறிப்பிட்டார்.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு. நா. பொன்னுத்துரை தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் சிவஸ்ரீ. க. இராமச்சந்திரக் குருக்கள், பண்டித வித்துவான் இ. நவரத்தினக்குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.

ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் அந்தாதிநூலை வெளியிட்டு வைத்தார். பண்டிதர் க. சபாஆனந்தர் விமர்சன உரையாற்றினார். (இ-7)

### செய்திக்கொத்து

#### ஒரு தடவை மட்டும் நிவாரணம் ஏன்?

கோப்பாய், ஆக. 25

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட கோப்பாய் வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் அரச நிவாரணம் ஒரு தடவையே மாத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

ஏனைய பகுதிகளில் மூன்று தடவைகள் கூட நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

கோப்பாய் வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் பாதிப்பு இடம்பெறவில்லை எனக் காரணம் காட்டி இது நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (இ-ரி)

#### இரத்த தானம் செய்யக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 25

நல்லூரில் நடைபெறும் இரத்த தானத்தில் சர்வதேச சென். ஜோன் அம்புலன்ஸ் முதலுதவிப் படையின் அங்கத்தவர்கள் அனைவரும் கலந்து கொண்டு இரத்ததானம் செய்ய வேண்டும்.

இவ்வாறு இந்த முதலுதவிப் படையின் வடமாகாண ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-7)

#### கிடுகு இலவசம்

கிளிநொச்சி மாவட்டத்தில் வன்செயல் காரணமாக அல்லது கைவிடப்பட்டு போதிய பராமரிப்பு இன்றி சேதம் அடைந்த வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு சர்வோதயம் தென்னம் கிடுகுகளை இலவசமாக வழங்கும்.

வசதி குறைந்தோர் ஆங்காங்கே உள்ள சர்வோதய பாலர் பாடசாலை ஆசிரியர்கள் மூலம் விண்ணப்பிக்குமாறு கோரப்படுகின்றனர். (இ)

#### இடதுசாரிகளும் ஆதரவு

கொழும்பு, ஆக. 25

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை லங்கா சமசமாஜக் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் ஆதரித்து அறிக்கை வெளியிட்டுள்ளன.

#### கொக்குவிலில் திருட்டு முயற்சி

கொக்குவில், ஆக. 25

கொக்குவில் சந்திக்கு சமீபமாகக் காங்கேசன் துறை வீதியிலுள்ளகடை ஒன்றை உடைத்துத் திருடும் முயற்சி அயலவர்கள் விழிப்படைந்து உஷாரானதால் தோல்வியில் முடிந்தது.

இரவில் கடை உடைக்கும் சத்தத்தைக் கேட்டு அயலவர்கள் வெளியே வந்து பார்த்தபொழுது திருடன் உடைத்த பூட்டுக்களையும் வீசி எறிந்து விட்டு ஓடித்தப்பி விட்டான்.

### விளையாட்டரங்கு

## கலைப்பீடம் சாம்பியன்

யாழ்ப்பாணம், ஆக. 25

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் பீடங்களுக்கு இடையேயான வருடாந்த மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டிகள் கடந்த ஞாயிறு பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்றன. மருத்துவ, கலை, விஞ்ஞான பீடங்கள் பங்குபற்றிய இப்போட்டிகளில் கலைப் பீடம் வெற்றி பெற்று சாம்பியனாகத் தெரிவானது.

ஞாயிறு காலை கலைப் பீடத்துக்கும் விஞ்ஞான பீடத்துக்கும் இடையில் நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய கலைப் பீடம் 25 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 195 ஓட்டங்களைப் பெற்றது. சேரமான் ஆட்டமிழக்காமல் 76 ஓட்டங்களையும், பாலகுமார் 3 சிக்சர்கள் உட்பட 60 ஓட்டங்களையும், மகிந்தா 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய விஞ்ஞான பீட அணியினால் தமக்கு ஒதுக்கப்பட்ட 25 ஓவர்களில் 7 விக்கெட் இழப்பிற்கு 142 ஓட்டங்களையே பெற முடிந்தது விஞ்ஞான பிரிவு சார்பில் முரளி 37 ஓட்டங்களையும் தேவநேசன் ஆட்டமிழக்காமல் 30 ஓட்டங்களையும் பெற்றனர். ரகுராகவன் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். கலைப் பீட அணி இந்த ஆட்டத்தில் 53 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

மாலையில் கலைப் பீட அணிக்கும் மருத்துவ பீட அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் முதலில் ஆடிய கலைப்பீடம் 6 விக்கெட் இழப்பிற்கு 200 ஓட்டங்களைப் பெற்றது என். பாலகுமார் ஆட்டமிழக்காமல் 56 ஓட்டங்களையும், சேரமான் 45 ஓட்டங்களையும் பெற்றனர்.

மருத்துவப் பிரிவு சார்பில் பந்து வீசிய ஜெகதீசன், வரதன், குணத்திலகன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.மருத்துவ பீட அணி துடுப்பெடுத்தாட்டத்தில் 24 ஓவர்களில் 70 ஓட்டங்களை மட்டுமே பெற்றுச் சுருண்டது. ஜெயந்தன் 30 ஓட்டங்களைப் பெற்றார். கணேந்திரன், பாலகுமார் ஆகியோர் தலா 3, 2 விக்கெட்டுகளைப் கைப்பற்றினர்.

விஞ்ஞான மருத்துவ பீடங்களை வெற்றி கொண்ட கலைப் பீடம் இறுதியில் சாம்பியனாகத் தெரிவானது. (இ-ஈ)

தடுப்புக்காவலிலுள்ள

## இளைஞர்களை விரைவாக விடுதலை செய்யுங்கள்

### வேல்முருகு கோரிக்கை

அம்பாறை, ஆக. 25

பொலீஸ் மற்றும் பாதுகாப்புப் படை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களை விடுவிக்கும் நடவடிக்கை துரிதப் படுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு கல்முனைப் பிரதேச பிரசைகள் குழுத் தலைவரும், கூட்டணிப் பிரமுகருமான திரு. ஆ. க. வேல்முருகு கோரிக்கை விடுத்தார்.

தற்போதைய சூழ்நிலையில் மேற்படி முகாம்களிலுள்ள தமிழ் இளைஞர்கள் படையினர் சிலரால் தாக்கப்படும் சம்பவங்கள் நடைபெறுவதாகத் தம்மிடம் தாய்மார் பலர் முறையிட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

உடனடியாக முகாம்களிலுள்ள தமிழ் இளைஞர்களை விடுதலை செய்ய ஆவன செய்யப்பட வேண்டுமென திரு. வேல்முருகு கோரியுள்ளார். (ஒ-14)

#### பயிற்சி வகுப்புகள்

திருகோணமலை இந்து இளைஞர் மன்றம், திருகோணமலை சிவயோக சமாஜத்துடன் இணைந்து யோகாசனப் பயிற்சி வகுப்புக்களை நடத்தவுள்ளன.

இந்தப் பயிற்சி வகுப்புக்கள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 6ஆம் திகதி ஆரம்பமாகும்.

திருகோணமலை பிரதான வீதியில் உள்ள சிவயோக சமாஜத்தில் சுவாமி ஸ்ரீமத் கெங்காதரனந்தா தலைமையில் வகுப்புக்கள் ஆரம்பித்து வைக்கப்படும்.

திரு. தா. பாக்கியநாதன் யோகாசனப் பயிற்சிகளை வழங்குவார்.

#### வீதி புனரமைப்பு

கோப்பாய், ஆக. 25

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி புனரமைக்கப்பட்டு வருகிறது. (இ-ரி)


நல்லூர் மகோற்சவத்தை முன்னிட்டு
உதயன் நடத்தும்
அதிர்ஷ்டப் பயணப் போட்டி



பெயர் ______
முகவரி ______

நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் மணிக்கோபுரங்கள் எத்தனை?

உதயன் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?

நல்லூரை வழிபட்ட இரு ஈழத்துச் சித்தர்கள் யாவர்?

சஞ்சீவி வார இதழின் இலட்சிய வாசகம் என்ன?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★★★★★★★★★
★சின்னஞ் சிறு★
★ விளம்பரம் ★
★★★★★★★★★

**தேவை**

வெளிநாடு ஒன்றில் சிறுபயிர் தோட்டவேலை செய்யக்கூடிய அனுபவமும் திறமையும் மிக்க வேலையாட்கள் தேவை. ஆங்கில அறிவு இருப்பது விரும்பத்தக்கது. விபரங்களுக்கு 814 (432) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (1564

கணக்கியலில் பயிற்சி பெற்றபெண்கள்தேவை. உடன் நேரில் வரவும் கொழும்பு ஸ்ருடியோ, 55, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (1500)

**இடம் மாற்றம்**

கொழும்பு ஸ்ருடியோ ஸ்ரான்லி வீதி, 20-8-87 முதல் (வெலிங்டன் சந்திக்கு வடக்கே) 55 மணிக்கூட்டு வீதிக்கு மாற்றப்பட்டுள்ளது. (1500)


# கிளிநொச்சி மீண்டும் சுறுசுறுப்பு அடைகிறது

கிளிநொச்சி, ஆக. 25 கிளிநொச்சியில் அண்மைக்கால அசம்பாவிதங்களினுல் மூடப்பட்டுக் கிடந்த வர்த்தக நிலையங்கள், அலுவலகங்கள் அனைத்தும் மீண்டும் இயங்கத் தொடங்கிவிட்டன.

கிளிநொச்சி பிரதம தபாலகத்தில் நிலை கொண்டிருந்த இலங்கை இராணுவம் அக்கட்டடத்தை விட்டு வெளியேறியுள்ளது. இதனைத் தொடர்ந்து இம்மாதம் முதல் கிளிநொச்சித் தபாலகம் பழைய இடத்திலேயே இயங்க ஆரம்பித்துள்ளது.

தபாலக நிர்வாகம் கட்டடத்தைத் திருத்தி அமைக்கும் பணியில் புனர்வாழ்வு அமைச்சிடம் பணம் கோரிவிண்ணப்பித்துள்ளது.

கிளிநொச்சிக் கச்சேரிக்கு முன்பாகவுள்ள கிளிநொச்சி பஸ் நிலையம் இராணுவத்தால் சீர்செய்யப்பட்டு உள்ளது. அதன் அருகிலே இருந்த இராணுவத்தினர் வேறு இடத்துக்கு மாற்றப்பட்டுவிட்டனர்.

அதைத் தொடர்ந்து பஸ் நிலையத்திற்குப் பிரயாணிகள் வரத்தொடங்கியுள்ளனர்.

பிரதான கண்டிவீதியில் இருந்த வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மீண்டும் இயங்கத்தொடங்கியுள்ளன. இராணுவ முகாமின் எல்லைக்குள் இருந்த பலவர்த்தக நிறுவனங்கள் கூட உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டு வியாபாரம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இராணுவ முகாம் விஸ்தரிப்பால் தரைமட்டமாக்கப்பட்ட பொதுச் சந்தை மூடப்பட்ட பின் புதிதாகத் திறந்து வைக்கப்பட்ட புதிய சந்தையை மீண்டும் ஆரம்பிக்க கிளிநொச்சி உப அபிவிருத்திச்சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

துப்புரவு செய்யும் வேலைகள் முடிவடைந்ததும் ஒரு சில நாட்களில் புதிய சந்தை இயங்கும் எனத் தெரிகிறது.

அரச அலுவலகங்கள் பலவும் தமது சொந்த இடங்களில் இயங்க ஆரம்பித்துள்ளன. உதவி அரசாங்க அதிபர் பணிமனை, கமநலச் சேவை நிலையம், விவசாய விரிவாக்க உதவிப் பணிப்பாளர் பணிமனை, புகையிரத நிலையம், காணி அலுவலகம், கச்சேரி போன்ற முக்கிய அலுவலகங்கள்பலவற்றிலும் சனக்கூட்டம் நிரம்பி வழியத் தொடங்கி உள்ளது. (ஒ-76)

## கண்ணி வெடியில் சிக்கியவர்கள்

வல்வெட்டித்துறை' ஆக. 25 கண்ணிவெடியில் சிக்கிய பலர் புலோலி அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகின்றனர்கள். விவரம் வருமாறு: வல்லிபுரம் புஸ்பராசா (வயது 18) ஊரிக்காடு, வல்வை,

எஸ். சோபனுதேவி (வயது11)வி. எம். ரோட் பருத்தித்துறை எஸ் சின்னத்தங்கம் (வயது75)வி. எம். ரோட் பருத்தித்துறை எம். சுமலாதேவி (வயது 45) மெதடிஸ்த மகளிர் கல்லூரிவீதி, பருத்தித்துறை சி. சின்னத்தம்பி (வயது 65)முத்தையன்கட்டுஎஸ் சின்னத்தம்பி (வயது 45) பருத்தித்துறை

இவர்கள் அனைவரும் ஒவ்வொரு காலகளை இழந்தவர்கள். (ஒ-160)

## அறிவுப் போட்டி

சாவகச்சேரி, ஆக. 25 நுணுவில் மேற்கு ஸ்ரீ வீரபத்திரர் தேவஸ்தான பரிபாலனசபை நாளை 26 ஆம்திகதி நடைபெறும் சங்காபிஷேக தினத்தையொட்டி சிறுவர், சிறுமியர்களுக்கிடையே சமய அறிவுப் போட்டிகளை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

# தமிழ்மக்கள் கூறும்வரை இந்திய இராணுவம் இருக்கவேண்டும்

### யாழ். மக்கள் மன்றம் ராஜீவுக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், ஆக26 திருப்பி அழைக்கும்படி தமிழ் மக்கள்கூறும் வரை இந்திய இராணுவம் இலங்கையில் இருக்க வேண்டும்.

யாழ்ப்பாணம் மக்கள் மன்றம்இந்தியப்பிரதமர் ராஜீவ்காந்திக்கு அனுப்பி வைத்த கடிதம் ஒன்றில் மேற்கண்ட வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது; இனக்கொலையில் இருந்து எம்மைக் காப்பாற்ற ஒப்பந்தம் ஒன்றின் மூலம் நீங்கள்எடுத்துக் கொண்ட முயற்சி எமக்கு நிம்மதி தருகின்றது.

அடக்குமுறைக்கு ஆளான தமிழரின் எதிர்காலம் இன்று உங்கள் கையில் தான் உள்ளது.

அச்சமின்றி, சமத்துவமான பிரசைகளாக தமிழர்கள் இந்த நாட்டில் வாழ்வதற்குத் தேவையான உரிமைப் பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கூடிய விதத்தில் ஒப்பந்தம் அமுல் நடத்தப்படும் என்று நாம் நம்புகின்றோம்.

தமிழ் இளைஞர்களிடமிருந்து ஆயுதங்கள் பெறப்படுகின்றன.

இனித் தமிழரைப் பாதுகாக்கும் பொறுப்பை இந்தியாவே ஏற்க வேண்டும்.

தமிழ் மக்களின் தாயகத்தைப் பிரிப்பதற்கு கிழக்கு மாகாணத்தில் ஒரு சர்வசன வாக்கெடுப்பை நடத்த ஒப்பந்தம் வழிவகுக்கின்றது.

இந்த அடிப்படையில் நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரித்து தனிநாடாக்க வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஒரு சர்வசன வாக்கெடுப்பை நடத்த வேண்டும்.

இப்படி கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. (இ-எ)

## சங்கானையில் கொள்ளை முயற்சி

சங்கானை, ஆக. 25 இளைஞர் ஒருவரிடம் இருந்து 35 ஆயிரம் ரூபா பணத்தை அபகரிக்கும் முயற்சி தோல்வியில் முடிந்தது.

சங்கானையில் இச் சம்பவம் இடம்பெற்றது.

பிரஸ்தாப இளைஞர் வெளிநாடு செல்வதற்காக நண்பர் ஒருவரிடம் இருந்து பணத்தை கைமாறிக் கொண்டு பாரதி வீதியில் இருந்து பழைய தபாற்கந்தோர் வீதி ஊடாக சேத்துப்பிடிச்சி வீதிக்கு வந்த போது இந்தக் கொள்ளை முயற்சி இடம்பெற்றது. (இ.29)

# டிச. 19 யோசனையை விட புதிய ஒப்பந்தம் வரவேற்கத்தக்கது

### பிரதி அமைச்சர் கருத்து

மட்டக்களப்பு, ஆக. 25 டிசம்பர் 19 யோசனையின் பிரகாரம் அம்பாறை தொகுதி கிழக்கு மாகாணத்தில் இருந்து பிரிக்கப்பட்டிருந்தால் கிழக்கில் சிங்களவர்பலம் குறைந்திருக்கும்.

மாகாண எல்லை அமைப்புகளிலும் மாற்றம் ஏற்பட்டிருக்கும். இந்நிலையில் அந்த யோசனையை விட இந்த ஒப்பந்தம் வரவேற்கத் தக்கதாகும்.

மேற்கண்டவாறு இந்திய - இலங்கை ஒப்பந்தம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அம்பாறை நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதி அமைச்சருமான திரு.பி. தயாரட்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், புதிய யோசனையில் இணைப்புக் குறித்து சர்வஜன வாக்கெடுப்பின் போது அம்பாறை சிங்களவர்கள் இணைப்புக்கு எதிராகவே வாக்களிப்பார்கள்.

கிழக்கில் சிங்களவர்களும் முஸ்லிம்களும் சேர்ந்தால் தமிழர்களை விட கூடுதலாக இருக்கிறார்கள்.

சிங்களவர்கள் மட்டுமல்ல முஸ்லிம்களும் சில தமிழர்களும்கூட இணைப்புக்கு எதிராகவே வாக்களிப்பார்கள்.

இந்நிலையில் வடக்கு-கிழக்கு இணைப்பிலிருந்து கிழக்கு நிச்சயம் பிரியும் என்றார். (ஒ-21)

# ஹாட்லி, மெதடிஸ்த மகளிர் கல்லூரிகள் வேறு இடங்களில் இயங்கும்

வல்வெட்டித்துறை, ஆக. 25 பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த மகளிர் கல்லூரி, சிதம்பராக் கல்லூரி ஆகிய மூன்று கல்லூரிகளும் வேறு இடங்களிலேயே இயங்கும்.

கோட்டக் கல்வி அதிகாரி செல்வி ரி. பெரியதம்பி இவ்வாறுதெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய இராணுவமோ, இலங்கை இராணுவமோ மேற்படி கல்லூரி மாணவர்களின் உயிர்ப்பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிக்காமையே இந்த நிலைக்குக் காரணமாகும்,

வடமராட்சியின் ஏனைய கல்விக் கூடங்கள் தற்காலிக இடங்களில் இயங்குவதற்கான நடவடிக்கைகளில் பெற்றோரும் பழைய மாணவர்களும் பொதுஸ்தாபனங்களும் சிரமதானப் பணிகளில் இயங்கி வருகின்றனர்.

இதன் காரணமாக எதிர்வரும் 31ம் திகதிக்கு முன்பல பாடசாலைகள் இயங்கும்.

வல்வை சிவகுரு வித்தியாசாலையில் இன்னும் அகதிகள் இருப்பதால் அவர்களுக்குத்தற்காலிக வீட்டு வசதி செய்யப்பட்டதும் அப்பாடசாலைகள் மீண்டும் இயங்கும் என்றும் அவர் கூறினர். (ஒ-160)


★ கலர் பிலிம்சுருள்களை இரண்டு நாட்களில் Processing — Printing நவீனமுறையில் செய்து தருபவர்கள்

★ **கொழும்பு ஸ்ருடியோ** ★

55, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்,

★ ஐந்து(5) அதிஷ்டசாலிகளுக்கு மாதாந்தம் கலர் பிலிம் சுருள் இனும்.



## வேலை வாய்ப்பு

இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்ட வெளிநாட்டு தாபனம் ஒன்று யாழ் குடாநாட்டுக்குள் உள்ள 10 உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குள் சில உதவித் திட்டங்கள் நடத்த இருக்கிறார்கள்.

கீழ்க்காணும் வேலைகளுக்கு வெற்றிடங்கள் உண்டு

1. Bill Collectors:- ஒரு உ. அ. அ, பிரிவுக்கு 2 இடங்கள் மாத்திரம். வயது 30 – 60
2. Sales Promoters:- ஒரு உ. அ. அ. பிரிவுக்கு 2 இடங்கள் மாத்திரம். வயது 25 – 60

எம்மால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பிக்கவும். விண்ணப்பிக்கும் முடிவுத் திகதி 19-9-87. விண்ணப்பப் படிவம் விலை ரூபா 1/- மேலதிக விபரங்களுக்கு 814 (432) ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும். (1564)


## நயினை இராணுவ முகாமை அகற்றுமாறு திவ்விய ஜீவன சங்கமும் கோரிக்கை விடுக்கிறது

யாழ்ப்பாணம், ஆக. 25 நயினதீவின் புனிதத் தன்மையை மதித்து அங்குள்ள இராணுவ முகாமை அகற்றவேண்டும்.

இவ்வாறு நயினதீவு திவ்விய ஜீவன சங்கத்தின் செயலாளர் திரு. நா. கோபாலகிருஷ்ணன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

1983 ஆம் ஆண்டு பௌத்தவிகாரையைப் பாதுகாப்பது என்று ஒரு சில கடற்படையினர் காவலுக்கு நிறுத்தப்பட்டு அதுபடிப்படியாக ஒரு இராணுவ முகாமாகவே மாறிவிட்டது.

கடந்த நான்கு ஆண்டு காலமாக நயினதீவு மக்கள் இராணுவக் கட்டுப்பாட்டில்தான் வாழ்ந்து வருகிறார்கள்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னரும் இந்த நிலை நீடிக்கின்றது.

இதை ஒரு முடிவுக்குக் கொண்டு வரவும் இந்து, பௌத்த யாத்திரிகர்கள் முன்னர் போல திரள் திரளாக வந்து போகவும் கூடியதாக உடனடியாக இந்த முகாம் அகற்றப்படவேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார். (இ-7)

## சித்ரூபானந்தா ராஜீவுக்குக் கடிதம்

பருத்தித்துறை, ஆக. 25 சுவாமி விவேகானந்தர் கூறிய தீர்க்கதரிசனமான நவீன இந்தியா என்பது பாரதப்பிரதமர் ராஜீவ் காந்தியினுலே தோற்றுவிக்கப்பட்டது.

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம பீடாதிபதி சுவாமி சித்ரூபானந்தா இந்தியப் பிரதமருக்கு அனுப்பிய கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

உறுதியான உடலில் உறுதியான உள்ளம் அமையும் என சுவாமி விவேகானந்தர் கூறியது போல தங்களின் உடல் உறுதியையும்உள்ளஉறுதியும் இலங்கை - இந்திய சமாதான ஒப்பந்தம் எடுத்துக் காட்டுகிறது என்றும் கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# நல்லூரில் சேவை செய்யும் சாரணர்களுக்கு

### உதவிமாவட்ட ஆணையாளர் பாராட்டு

யாழ்ப்பாணம், ஆக. 25 அதிகாலை 4 மணியளவில் இரவு வரை சேவையில் ஈடுபடும் உங்கள் தியாகங்களை நினைத்துப் பெருமை அடைகின்றேன்.

நல்லூர் உற்சவத்தின் சாரண சேவை செய்யும் சாரணர்களுக்கான கூட்டத்தில் உரையாற்றிய உதவி மாவட்ட ஆணையாளர் (நிர்வாகம்) திரு. டோறஸ்; இராஜசிங்கம் மேற்கண்டவாறு கூறினுர்.

அவர் தொடர்ந்து. உரையாற்றுகையில் சாரணர்களின் சிறப்பான சேவைகண்டு மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன் என்ருர்.

நல்லூர் சேவைஅமைப்பாளரும் உதவிமாவட்ட ஆணையாளருமான (சமூக சேவை) திரு. சு. ஏகாம்பரநாதன் பேசுகையில் 1961 ஆம் ஆண்டில் இருந்து தொடர்ந்து இச்சேவையை செய்துவரும் ஒரே சமூகசேவை இயக்கம் இது என்பதையிட்டு பெருமை அடைகிறேன் என்ருர்.

நல்லூர் சேவையில் இரவு பகல் பாராமல் சேவையாற்றிவரும் சேவை நிர்வாகப் பொறுப்பாளர்களான திரு. செ. தேவறஞ்சன், திரு. ஆர். ராஜ்குமார் ஆகியோர் உதவிமாவட்டஆணையாளர்களின் பாராட்டுதல்களைப் பெற்றனர். (இ-7)

## புதிய- -

(3ம் பக்கத் தொடர்ச்சி) வணங்க வேண்டும்என்று நான் நினைக்கவில்லை. இப்போது கடவுளை வணங்குவது போல் அதை வணங்குகின்றனர். நாட்டின் ஐக்கியத்திலும் பார்க்க, அதன் ஒன்றுபட்ட தன்மை தான் முக்கியம்.

கேள்வி: முட்டையை உடைக்காமல் 'புல்ஸ்-ஐ' தயாரிக்க முயற்சிப்பது போல் என்று கூறலாமா?

கொல்வின்: பொரித்த முட்டையை மீண்டும் முழு முட்டையாக்க முயற்சிப்பது மாதிரி அரசமைப்புச் சட்டத்தைப் பாவிக்கக் கூடாது.

கேள்வி: தேசியப் புனருத்தாரணம், இணக்கம் ஆகியவற்றில் பங்கு கொள்ளும்படி அரசு அழைத்தால் உங்கள் கட்சி ஏற்றுக் கொள்ளுமா?

கொல்வின்: இதுபற்றி மேலும் விளக்கம் வேண்டும். ஏனைய கட்சிகள் சர்வகட்சி மாநாட்டைப் பகிஷ்கரித்தன நாம் கலந்து கொண்டோம். அப்படி அழைக்கப்பட்டால் நாம் பரிசிலனை செய்வோம். (இ-எ)

## அதிபர் கோரிக்கை

வடமராட்சி, ஆக. 25 தேவரையாளிக்கல்லூரி [illegible] பயிற்[illegible] பதித்த மாணவ, மாணவிகளை இம் மாதம் 31ம் திகதி காலை 9.00 மணியளவில் வருகைதருமாறு [illegible] பிரிவு அதிபர் கோரியுள்ளார். (இ-160)

## பாடசாலைகள் புனருத்தாரணம்

பருத்தித்துறை, ஆக. 25 வடமராட்சிப் பகுதியில் அண்மைக்காலத்தில் நடைபெற்ற வன்செயல்களால் பாதிக்கப்பட்ட பாடசாலைப் புனருத்தாரணம் செய்வதற்கு அரசு முன்வந்துள்ளது.

இதற்கான நிதிச் செலவினங்களை மதிப்பீடு செய்வதற்காக சகல பாடசாலைகளும் யாழ் பிரதேசகல்விப்பணிப்பாளர் ஜனுப் எம். எம். மன்சூரினுல் கேள்விக்கொத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது (இ-118)


# பிரயாண ஒழுங்குகள்

★ சவூதி அரேபியா

★ ஈராக்

❖ பின்வரும் வேலைவாய்ப்பு வெற்றிடங்கள் எம்மிடம் உண்டு

★ JEDDAH ★

**I. American Establishment -**

TELECOMUNICATION DEPARTMENT

| | | | |
|---|---|---|---|
| 1. | INDUSTRIAL ELECTRICIAN | 3 | 600 S.R. |
| 2. | CABLE JOINERS | 3 | 600 S.R. |
| 3. | LINES MAN | 3 | 600 S.R. |
| 4. | ACCOUNTS CLERK | 3 | 600 S.R. |
| 5. | HEAVY EQUIPMENT OPERATORS | 1 | 600 S.R. |
| 6. | SECURITY | 10 | 600 S.R. |
| 7. | LABOURER | 32 | 350 S.R. |

**II. American Company**
**Maintenance Cleaner**

(A) 25 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கு மட்டும் சாப்பாடு இருப்பிட வசதியுடன் சம்பளம் மட்டும் 500 S. R. இவர்களது பயண ஒழுங்குகள் 15-09-87 இற்கு முன்னர் செய்து கொடுக்கப்படும்.

(B) 21 வயதிற்கு மேற்பட்டவர்கள் CLEANERS சாப்பாடு இருப்பிட வசதியுடன் சம்பளம் 350 S. R.

★ IRAQ ★
(HOSPITAL CLEANERS JAPANESE COMPANY)

- 18 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் சம்பளம் இருப்பிட வசதியுடன் 65 டினர்
- ஏற்கனவே பாஸ்போட் தந்தவர்களுக்கு 31ஆம் திகதிக்குள் பிரயாண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

★ தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-

★ T. இந்திரநாதன் ★

M. THREE TRAVELS
96, Kachcheri Nallur Road,
Nallur, Jaffna.
(முத்திரைச் சந்திக்கு அருகாமையில்)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

Physics Class — Viyaparimoolai
G. C. E. (A/L) 1988
HEAT
ஆரம்பம்: 26-8-87
ஆசிரியர்:
வர்ணம் B. Sc. (Hons)

உதயன்

25 - 08 - 1987 செவ்வாய்க்கிழமை

Physics Class — Viyaparimoolai
G. C. E. A/L 1989
அளவீடுகள்
ஆரம்பம்: 28-8-87
காலை 6-00 மணி
ஆசிரியர்: VARNAM B. Sc. (Hons)

இந்திய -- இலங்கை ஒப்பந்தம்

# முழுக் கோரிக்கைகளையும் பூர்த்தியாக்கவில்லை

# சில அபிலாஷைகளையே திருப்தி செய்துள்ளது

## சென்னை கருத்தரங்கில் -அமிர்

தமிழரின் எல்லாக் கோரிக்கைகளையும் ஒப்பந்தம் பூர்த்தி செய்யவில்லை; ஆனால் சில அபிலாஷைகளை மட்டுமே திருப்தி செய்துள்ளது. 30ஆண்டுகளாக இருந்து வந்த சில அச்சங்களையும் நீக்கியுள்ளது. ஒருசந்தர்ப்பம் கொடுத்துப் பார்ப்போம் என்றே தமிழர் இதனை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இப்படிச் சொன்னர் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம்.

மைலாப்பூர் அக்கடமி சென்னையில் நடத்திய இந்திய-இலங்கை ஒப்பந்தம் பற்றிய கருத்தரங்கில் பேசுகையில் திரு. அமிர்தலிங்கம் இதனைத் தெரிவித்தார்.

முன்னள் நிதி அமைச்சர் சி. சுப்பிரமணியம் தலைமை வகித்தார்.

திரு. அமிர்தலிங்கம் மேலும்சொன்னதாவது;

ஒப்பந்தத்துக்குத் தமிழர் எதிர்ப்பல்லர். எந்த ஒப்பந்தம் உருவாவதற்கும் இரு தரப்பும் விட்டுக் கொடுக்கத்தான் வேண்டும். அந்த அடிப்படையில் தான் தமிழர் விட்டுக் கொடுத்து இணக்கம்கண்டுள்ளனர்.

இனப்பிரச்சினையின் ஆரம்பமே 1956இல் கொண்டு வரப்பட்ட சிங்களமொழிச் சட்டம் தான் தமிழும் உத்தியோக மொழி என்று தற்போதைய ஒப்பந்தம் கூறுகின்றது.

**அமைதிப் படையை வரவேற்கின்றனர்**

1983 க்குப் பின்னர் முதல் தடவையாக



வடக்கு, கிழக்குத் தமிழர் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கின்றனர், ஒப்பந்தத்தை வரவேற்கும் அவர்கள் இந்திய அமைதிப் படையின் வருகையையும் வரவேற்கின்றனர்.

ஒப்பந்தம் சரியாக அமுல் நடத்தப்படுவதற்கு முறையான சட்டம் ஒழுங்கு, பராமரிப்புக்குத் தேவையான நிர்வாக இயந்திரம் வடக்கு, கிழக்கு அமைப்புக்குத் தேவை.

ஒப்பந்தம் சரியாக அமுல் நடத்தப்படுகின்றதா என்பதை இந்திய மக்கள் சரியாகப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இப்பிராந்தியத்தின் சமாதானமே ஒப்பந்தத்தின் வெற்றியில் தான் தங்கியுள்ளது.

இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர் அதன் இராஜதந்திரத்துக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றி இந்த ஒப்பந்தமே.

இப்படி திரு. அமிர்தலிங்கம் சொன்னர்.

**'இந்து' இணை ஆசிரியரின் கருத்து**

'இந்து' இணை ஆசிரியர் என். ராம் சொன்னதாவது;

மிகச்சிறந்த ஒப்பந்தம் இது. இது தோல்வி அடையும் என்ற கேள்விக்கே இடமில்லை. இரண்டு தனி நபர்களுக்கு இடையேயான ஒன்றல்ல இது. இரண்டு நாடுகள் சம்பந்தப்பட்ட சர்வதேச உடன்பாடு இது. பல வழிகளாலும் இது அமுல் நடத்தப்பட்டாக வேண்டும்.

அமைதி திரும்பிய பின்னர் உயிர்கள் இழக்கப்படவில்லை. ஆயுதங்கள் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன.

தமிழருக்கு இலங்கை இராணுவத்தினல் எதிர்காலத்தில் ஆபத்து இல்லை என்பது உறுதிப்படுத்தப்படும்போது தான் ஒப்பந்த அமுல் பூரணமாகும்.

உடன்பாட்டில் மூன்று முக்கிய அம்சங்கள் உள்ளன.

ஒன்று, இருதரப்பிலும் இராணுவ மயத்தை நீக்குதல்.

இரண்டு, சுயாட்சி அமைப்பை ஏற்படுத்தல்.

மூன்று, திருமலையை, இந்தியாவைப் பயமுறுத்தும் சக்திகளிடம் கையளிக்காதபடி இரு நாடுகளின் உறவுகளை வளர்ப்பது.

முழுதாகப் பார்த்தால் இது நட்புறவு ஒப்பந்தம் ஆகும்.

**தமிழீழக் கோரிக்கையை கைவிட வேண்டும்**

ஏனைய தமிழர் அமைப்புக்களும் திரு. அமிர்தலிங்கமும் தமிழீழம் கோரிக்கையைக் கைவிட்டு சுயாட்சியையும் ஐக்கியத்தையும் ஏற்க வேண்டும்.

இப்படி திரு. ராம் சொன்னர்.

துக்ளக் ஆசிரியர், நடிகர் சோ சொன்னதாவது:

தற்போதைய சூழ்நிலையில் இந்திய அரசினல் செய்யக்கூடியது இது தான். புத்திசாலித்தனமாக இந்தியப் பிரதமர் காந்தி நடந்து கொண்டார். ஒப்பந்தம் தோல்வி கண்டாலும், அதை அடையக் கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறையைப் பாராட்டியே ஆக வேண்டும்.

இப்படிசோசொன்னர்.

தலைமையுரையில் திரு. சுப்பிரமணியம் சொன்னதாவது:-

முதல் தடவையாக பிராந்தியத்தின் நலன் கருதிச் செய்யப்பட்ட ஒப்பந்தம் இது. இது போன்ற ஒப்பந்தங்கள் சீனு, பாகிஸ்தான், நேபாளம் ஆகியவற்றுடன் செய்யப்படவேண்டும்.

**போராளிகள் எதிர்க்கக் கூடாது**

ஆயுதங்களை ஒப்படைப்பதை போராளிகள் எதிர்க்கக் கூடாது. சகல ஆயுதங்களும் ஒப்படைக்கப்பட்டால், இலங்கைத் தமிழர்களின் உயிர்களைக் காப்பாற்றும் தார்மீகப் பொறுப்பில் இருந்து உலக நாடுகள் தப்பிக்க முடியாது.

தமிழீழம் கோரிக்கையை எல்லா அமைப்புகளும் கைகழுவி விட வேண்டும்'

இலங்கையில் இருந்து வரும் மலையகத் தமிழரை அந்தமானில் இந்திய அரசு குடியேற்ற வேண்டும்.

இப்படி திரு. சுப்பிரமணியம் தெரிவித்தார். (இ-எ)

### பெரும்பான்மை இருந்தாலும்

## நாட்டைப் பிரிக்கும் செயலை செய்யமுடியாது

### பிரதமர் பிரேமா உரை

கொழும்பு, ஆக. 25

அரசாங்கம் நூறு சதவீதப் பெரும்பான்மையைக் கொண்டு இருந்தாலும் நாட்டைப் பிரிக்கக்கூடிய, இறைமையைப் பாதிக்கக்கூடிய, எதையும் நாடாளுமன்றத்தினல் செய்யமுடியாது.

—இப்படிச் சொன்னர் பிரதமர் பிரேமதாஸ.

கொழும்பு சுசரித்த மண்டபத்தில் நடந்த யு. என். பி. கொழும்பு மத்திய கிளையின் கூட்டத்தில் பேசுகையில் பிரதமர் இக் கருத்தை வெளியிட்டார்.

பிரதமர் மேலும் சொன்னதாவது;

முன்னர் இருந்த அரசமைப்புத் திட்டத்தின் கீழ் நாடாளுமன்றத்துக்கே முழு அதிகாரங்களும் வழங்கப்பட்டிருந்தன. அதன் காரணமாகத்தான் மூன்றில் இரு பெரும்பான்மையைக் கொண்டு நாடாளுமன்றத்தின் ஆயுளை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்க முடிந்தது.

அப்படி எல்லாம் இப்போது செய்ய முடியாது. அப்படி ஆயுளை நீடிக்க தற்போது உள்ள அரசமைப்புச் சட்டத்தின் கீழ் சர்வசன வாக்கெடுப்பை நடத்தி மக்களின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும்.

நாட்டின் இன்னெரு அரசாங்கத்தை நிறுவுவது சாத்தியப்படாது என்பதை நாம் தெளிவாகக் கூறிவிட்டோம்.

— இப்படிப் பிரதமர் சொன்னர். (உ-எ)

## ஒரு கையில்......

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்டவிதம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நான் சார்ந்திருக்கின்ற அமலமரி தியாகிகள் குரவர் தனிநாட்டுத் தீர்மானத்தை ஆதரித்து தீர்மானம் நிறைவேற்றினர்; மடு தேவாலயத்தில் ஸ்ரீலங்கா, பிரதமர் பேசுவதற்கு எதிர்ப்பு தெரிவித்தது.

பிலிப்பைன்ஸ் குரவர் சக்கரியாஸ் டயரியில் என்பெயர் இருந்தது.

அதுகுறித்து என்னிடம் விசாரித்தபோது, ''கற்பாறையில் கட்டப்பட்டது திருச்சபை அத்துடன் மோதுபவர்கள் உடைந்து போவார்களே தவிர, திருச்சபை உடையாது'' என்று அவரிடம் கூறினேன்.

''உடைந்தது எது என்பதை இப்போ அனைவரும் உணருவர்'' என்று சிங்கராயர் கூறினர்.

மகனின் சிறை உடை பட்டுக் கொண்டிருக்கும் போது நான் இறைவனிடம் ''ஏசுவைப்போல் நான் இறக்கக்கூடிய தெம்பையும், தியாகத்தையும் தாரும்'' என்று மன்றுடினேன்''.

## ஒப்பந்தத்தின் வழி....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வெற்று அரசியல் ஆரவாரச் சக்திகள் தம் போலித்தனங்களை மூடி மறைக்க முற்படலாம்.

எனவே, இன்றைய சூழ்நிலையில்இக்கட்டான தன்மையினை செவ்வனே புரிந்து கொண்டு பொருத்தமான சரியான அரசியல் கோரிக்கைகளின் அடிப்படையில் ஈழவர் முன்னணி முன் வைக்கும் சகல போராட்ட நடவடிக்கைகளுக்கும் மக்கள் தம்மாலான ஒத்துழைப்பை நல்க வேண்டுமென முன்னணி எதிர்பார்க்கிறது

இரு தலைமுறைக்கும் மேலாக இம் மண்ணிலேயே வாழ்ந்து, தம் உழைப்பாலும், உதிரத்தாலும் நாட்டை வளம் பெறச்செய்த மலையகத் தமிழ்ச் சகோதரர்கள் இந்நாட்டின் சொந்தக்காரர்களே.

ஆனல் அரசு ஏற்கனவே வழங்கியுள்ள 18 மாதக் காலக்கெடு முடிவடைந்த பின்னரும்கூட லட்சக் கணக்கானேர் குடியுரிமைகூடப் பெருத நிலையில் அவர்களை நாடு கடத்த எடுக்கப்படும் முயற்சிகள் கபடத்தனமானவை எனக் கண்டனம் செய்கிறோம்.

கலவரங்களால் இடம் பெயர்ந்தோர் என்ற போர்வையில் ஆக்கிரமிப்பு நோக்கம்கொண்ட சிங்கள ஊடுருவல்களை முற்றாக எதிர்போம். குறிப்பாக பதவியா போன்ற வடக்கு-கிழக்கு இணைப்பை கூறுபோடும் வகையிலமையும் திட்டமிட்ட குடியேற்றங்கள் உடன் நிறுத்தப்பட வேண்டும்.

★ 1. மலையக மக்கள் இந்தியப் பிரசைகள் அல்லர்! அவர்கள் ஈழவரே!!

★ 2. தமிழ்ப் பிரதேசங்களில் சிங்கள குடியேற்றங்கள் ஆக்கிரமிப்பின் சின்னங்களே!

★ 3. சிறைக் கைதிகள் விடுவிக்கப்படாமல் இருப்பது உடன்பாட்டு மீறலே!

★ 4. அமைதி காக்கும் படைகள் நிலை கொண்ட பின்னும் அவசரகாலச் சட்டமும், பயங்கரவாத தடைச் சட்டமும் எதற்காக?

—இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. (உ)

## விபத்தில்----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிற்கு காட்டுவதற்கு என யாழ் ஆஸ்பத்திரிக்கு தனது கணவனுடன் சைக்கிளில் வந்து கொண்டிருந்தபொழுதே விபத்தில் சிக்கிக் கொண்டார். (உ-10)

## பருத்தித்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டன் செய்து கொள்ளும் முன் ஒழுங்குடன் விசேட கரும பீடத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

நெல்லியடிக்கிளையில் வைக்கப்பட்ட நடைமுறைக்கணக்கு, சேமிப்புக் கணக்கு ஆகியவற்றின் பேரால் இந்த விசேட கருமபீடத்தில் பத்தால் பெருக்கக்கூடிய தொகையை வைப்புச் செய்யலாம்.

இது சம்பந்தமான மேலதிக விவரங்களை வாடிக்கையாளர் நெல்லியடிக்கிளை முகாமையாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம் என்று இலங்கை வங்கி யாழ் மாவட்ட முகாமையாளர் அறிவிக்கின்றர். [உ-எ]

## சிங்கராயரின் மறை உரைகள்

குருநகர், ஆக 25

வண - பிதா, சிங்கராயரின் மறை உரைகள். தொடர்ந்து ஒவ்வொரு நாளும் குருநகர், புனித ஆரோக்கியநாதர் ஆலய உற்சவ மாலை நேர ஆராதனையில் நடைபெறுமென ஆலய பரிபாலன சபை செயலாளர் திரு. வி. எம். ஜெரூட் தெரிவித்து உள்ளார்.

இம் மாதம் 27ம் திகதி வரை மறை உரைகள் மேற்படி ஆலயத்தில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (உ-51)

## இலங்கை இந்திய--

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காந்தி இலங்கை ஜனதிபதி ஜெயவர்த்தனவுக்கு எடுத்துப்பேசினர்.

இந்திய—இலங்கை உறவு நெருக்கத்தை வளர்க்க நேரடித் தொலைபேசித் தொடர்பு உதவும்—இப்படிப் பிரதமர் காந்தி ஜனதிபதி ஜெயவர்த்தனவிடம் தெரிவித்தார்.

இந்தியாவில் உள்ள 400 நகரங்களில் இருந்து இலங்கையுடன் நேரடித் தொடர்புகொள்ள இது வழிவகுக்கின்றது.

சார்க் அமைப்பு நாடுகளில் பங்களாதேஷ், நேபாளம் ஆகியவற்றுடன் இந்தியா ஏற்கனவே நேரடித் தொலைபேசித் தொடர்பை வைத்து உள்ளது

—இலங்கை மூன்ருவது நாடாகும். (உ-எ)

ஜனதிபதி கொலை முயற்சி:

## துப்பாக்கி வேட்டுத் தீர்க்கப்படவில்லை?

### கிரனேட் வீச்சே நிகழ்ந்தது

கொழும்பு, ஆக. 25

கடந்த செவ்வாய்க்கிழமையன்று அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தின்போது நடத்தப்பட்ட தாக்குதலின் போது ஜனதிபதியை நோக்கித் துப்பாக்கி வேட்டு எதுவும் தீர்க்கப்படவில்லை என்றே கருதப்படுகிறது. இரண்டு கிரனேட்டுகள் மட்டுமே வீசப்பட்டன.

துப்பாக்கி வேட்டுத் தீர்க்கப்பட்டதாக முன்னர் கூறப்பட்டது தவறு என்றே கருதவேண்டி உள்ளது

இரகசியப் பொலீஸ் பிரிவின் உதவி பொலீஸ் மா அதிபர் திரு. பிராங் சில்வா இப்படித் தெரிவித்திருக்கின்ருர்.

இந்தத் தாக்குதலின் போது படுகாயமடைந்து கடந்த ஞாயிற்றுக் கிழமை உயிரிழந்த நாடாளுமன்ற ஊழியர் சேனதீரவின் பிரேத பரிசோதனை அறிக்கை கிடைத்திருக்கிறது.

அதன்படி அவர் துப்பாக்கி வேட்டினல் காயமடையவில்லை. கிரனேட் குண்டுச் சிதறல்களே அவரைத்தாக்கியுள்ளன.

அரச பகுப்பாய்வாளரின் அறிக்கையின்படி தாக்குதல் நடைபெற்ற இடத்தில் துப்பாக்கிக் குண்டு ஏதும் தாக்கியதற்கான அடையாளங்கள் ஏதுமில்லை —என்று திரு. பிராங் சில்வா தெரிவித்தார்.

எனினும் இதுகுறித்து முடிவாகத் தெரிவிக்க முடியாது என்றும் திரு. சில்வா சொன்னர். (அ-உ)

## துர்க்காதேவி உற்சவம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஆக. 25

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 11.30 மணிக்கு கொடியேற்று வைபவத்துடன் ஆரம்பமாகின்றது.

இதனைத் தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் உற்சவங்கள் நிகழ இருக்கின்றன.

02-09-87 புதன் கிழமை வேட்டைத் திருவிழாவும் (குதிரைவாகனம்) 03-09-87 வியாழக்கிழமை சப்பறத் திருவிழாவும், 04-09-87 வெள்ளிக்கிழமை ரதோற்சவமும் நிகழ இருக்கின்றன. (அ)

## ஒப்பந்தம்----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஒப்பந்தம் குறித்து அமெரிக்காவும் சோவியத் யூனியனும் பூரண திருப்தி தெரிவித்துள்ளன; இந்தியாவின் பங்கையும் பாராட்டியுள்ளன. அதனை இரண்டு நாடுகளும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டும் உள்ளன.

இந்தியாவுடன் யதார்த்தபூர்வமான கொள்கையை இலங்கை கடைப்பிடிக்க வேண்டும். அதற்காக இலங்கை அணிசேராக் கொள்கையைத் தொடர்ந்து அனுஷ்டிக்க வேண்டும்.

**இலங்கை ஏற்கவேண்டும்**

இந்தியாவைச் சில விஷயங்களில் அச்சப்பட வைத்ததற்கான குற்றத்தை இலங்கை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

இலங்கை, அணிசேராக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் நாடு என்ருலும் சிறிது காலம் வல்லரசுகளின் வலைக்குள் விழும் ஆபத்தை எதிர்நோக்கியிருந்தது.

அதிர்ஷ்டவசமாக ஜனதிபதி ஜெயவர்த்தனவும் நானும் இந்த ஆபத்தை உணர்ந்து கொண்டோம்.

அதனல் தான் இந்த ஒப்பந்தம் தனித்துவமானது என்கின்றேன்.

— இப்படிப் பிரதமர் பிரேமதாஸா சொன்னர். (உ-எ)




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட் ... இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 25-08-1987 Printed and Publishedby New Uthayan Publications (Pvt) Ltd. ... Navalar Road, Jaffna on Tuesday August 25 1987

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org